வெள்ளைக்காரன் கதை

பதிப்பாசிரியர்

டாக்டர் ஏ.என்.பெருமாள்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

வெள்ளைக்காரன் கதை

பதிப்பாசிரியர்
டாக்டர் ஏ. என். பெருமாள்

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies
சென்னை-600 113

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	—	VELLAIKKARAN KATAI
Editor	—	DR. A. N. PERUMAL Associate Professor International Institute of Tamil Studies, Madras-600 113.
Publication Number	—	73
Language	—	Tamil and English
Edition	—	First
Date of Publication	—	July 1983
Copyright	—	International Institute of Tamil Studies
Paper used	—	Mandya Paper 16 K G.
Size of the Book	—	22.5×14.5 C.ms.
Printing types used	—	10, 18 Points
Number of pages	—	VIII + 112
Number of Copies	—	2200
Price	—	Rs. 7·00
Printers	—	VEK Printers, 34, Kothawal Street Alandur, Madras-600 016
Binding	—	Card Board
Artist	—	Eswari
Publisher	—	International Institute of Tamil Studies, Madras-600 113
Subject	—	A Historical Ballad

முன்னுரை

டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்
இயக்குநர்
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் தமிழக அரசின் நல்லாவலுக்கு இணங்கத் தமிழ்ச்சுவடிகளைத் தேடிச் சேகரிப்பதுடன் பலவற்றை அச்சேற்றி வெளியிட்டும் வருகிறது. இவ்வாண்டு கிடைத்த பல கதைப்பாடற் சுவடிகளில் மிகச் சிறந்ததாக 'வெள்ளைக்காரன் கதை' அமைந்ததனால் அதை அச்சுருவாக்கக் கருதினோம். அப்பொறுப்பை ஏற்று இணைப் பேராசிரியர் டாக்டர் ஏ. என். பெருமாள் இந்த நூலை உருவாக்கியுள்ளார்.

வெள்ளைக்காரன் கதைப்பாடல் தனிச் சிறப்புக் கொண்டதாகக் காணப்படுகிறது. ஒரு வெள்ளைக்காரன் நாட்டுப்புறத் தெய்வமாக்கப்பட்டு வணங்கப்படுவதையும் அவனுடைய கதை வில்லில் பாடப்பெறுவதையும், கன்னியாகுமரி மாவட்டத்தில் இன்றும் காணலாம். நாட்டுப்புறத் தெய்வங்கள் எவ்வாறு உருவாக்கப்படுகின்றன என்பதற்கு இது ஒரு நல்ல சான்றாக விளங்குகிறது. இக்கதையில் பல பயனுடைய வரலாற்றுச் செய்திகள் இடம் பெற்றுள்ளன.

தமிழ் நாட்டிலிருந்து பல வல்லுநரைக் கப்பல் கட்டுவதற்காக இங்கிலாந்து நாட்டுக்கு அழைத்துச் சென்ற செய்தி இந்தக் கதையில் குறிப்பிடப்பட்டுள்ளது. குமரி முனைக்கு மேற்கே இருந்த மண் கோட்டை வஞ்சி நாட்டு மன்னரால் கட்டப்பட்டது என்ற குறிப்பும் உள்ளது. ஊர்ப் பெயர்களை அடுக்கிக் கூறுவது கதைப் பாடல் மரபுகளில் ஒன்றாகும். வெள்ளைக்காரனின் கப்பல் இங்கிலாந்திலுள்ள டோவர் துறைமுகத்திலிருந்து கன்னியாகுமரி நோக்கி வரும்போது வழியிலுள்ள சுமார் 75 இடங்களின் பெயர்களை வரிசையாக ஒரு நாட்டுப்புறப் பாடல் ஆசிரியர் கூறுவது வியப்பாகவும் சிறப்பாகவும் உள்ளது.

மரத்தில் தெய்வங்கள் உறைந்திருக்கும் என்ற மக்கள் நம்பிக்கை கதையின் கட்டமைப்புக்கு மிகவும் உதவியுள்ளது. தெய்வங்கள் மனிதவுணர்வுடன் செயல்படும் என்ற கருத்துடன் பழிக்குப் பழி வாங்கும் என்பதும் விளக்கப்படுகிறது. தெய்வங்களின் மன்னிக்கும் இயல்பும் வரம் வழங்கும் தன்மையும் சுட்டப்பட்டுள்ளன.

பல்வேறு சந்த அமைப்புடைய பாடல்களால் வெள்ளைக்காரன் கதை எழுதப்பெற்றுள்ளது. அறியத்தக்க கருத்துக்கள் நிறைந்த கதைப்பாடலை ஆய்வுரை, விளக்கவுரை முதலியவற்றுடன் சிறப்பாகப் பதிப்பிக்க டாக்டர் பெருமாள் உதவியுள்ளார். இவ்வரிய பணிக்கு அவர்களைப் பெரிதும் நிறுவனம் பாராட்டுகிறது. இன்னும் பல கதைப் பாடல்களை இவ்வாறு பதித்து வெளியிட நிறுவனம் விரும்புகிறது.

இத்தகைய ஆக்கப் பணிகளுக்கு மிகுதியாக ஊக்கம் தந்து உதவும் மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்களை நன்றியோடு நினைக்கிறோம்.

அன்பன்

ச. வே. சுப்பிரமணியன்

நன்றியுரை

சுவடிவுருவிலிருக்கும் அரிய தமிழ் நூல்களை அச்சுருவாக்கி அவனிக்கு வழங்க வேண்டும் என்று அளவிலா ஆவல் கொண்டு பல நூல்களை நிறுவன வாயிலாக வெளியிட்டுத் தமிழுக்குப் புகழீட்டும் இயக்குநர் டாக்டர் ச. வே. சுப்பிர மணியன் அவர்கள் 'வெள்ளைக்காரன் கதைப் பாடலைப்' பதிப்பித்து வெளிப்படுத்தும் பணியை என்னிடம் ஒப்படைத்து ஊக்கமும் உணர்வும் ஊட்டினார்கள். அவர்களுடைய தமிழ் உணர்வுக்கும் மாசுமறுவற்ற அன்புக்கும் மிக்க நன்றியுடையேன்.

வெள்ளைக்காரன் கதைப்பாடல் சுவடியாகக் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த பூவியூர் வில்லுப்பாட்டுப் புலவர்களிடம் உள்ளது. அதைப் பயனுறப் படியெடுத்துத் தன்னால் இயன்ற அளவில் தெளிவாக எழுதி அனுப்பிய இளங்கவிஞர் பூவை ராஜனுக்கு உளங்கனித்த நன்றி. இன்னும் சில சுவடிகளை அவர் நிறுவனத்துக்காக அனுப்ப முயல்கிறார் என்பதை அன்புடன் குறிப்பிட்டு அவருடைய கவிதை ஆற்றல் மிக்க தமிழ்ப்பணி சிறக்க வாழ்த்துகிறேன்.

கையெழுத்துப்படியை மேலும் சீர்ப்படுத்திப் பாடல்களை ஒழுங்கு செய்து திருத்தமாக எழுதியதுடன் அச்சுப்படிகளை வழுவகற்ற உறுதுணை நின்ற நிறுவனச் சுவடிக் காப்பாளர் திரு. மு கோ. இராமன் அவர்களின் பேருதவிக்குப் பெரிதும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். சுவடி நூல்கள் ஆயிரம் ஆயிரமாகப் பல்கிப் பெருக அன்னார் விழைந்து அயராது உழைத்து வருவது பாராட்டத் தக்கதாகும்.

இந்தக் கதைப் பாடலின் தலைவனான வெள்ளைக் காரனின் கப்பல் சென்ற வழியை வரை படத்தில் குறிப்பிட்டு

அன்புடன் உதவிய நிறுவன ஆய்வாள அன்பர் திரு. **வே. இரா. மாதவனுக்கு** மிக்க நன்றி.

இந்நூலுக்குச் சொல்லகராதி அமைக்கப் பெரிதும் உதவிய அன்பின் செல்வன் திரு. **அகமது மரக்காயருக்கு** என் அன்பும் நன்றியும் என்றும் உளது. சுவடி நூல்களை அச்சாக்க பெரிதும் விரும்பும் தமிழக அரசுக்கும் அத்தகைய பணிகளை நாங்கள் நன்று செய்ய ஆவலுடன் உதவும் மாண்புமிக்கக் கல்வி அமைச்சர் திரு. **செ. அரங்கநாயகம்** அவர்களுக்கு எங்கள் பணிவான நன்றி உரியது.

நூலை அழகான முறையில் விரைவாக அச்சிட்டுத் தந்த ஆலந்தூர் **'வெக்'** அச்சக உரிமையாளர் திரு. **வெள்ளையப்பனை** அன்புடன் நினைத்து நன்றி கூறுகிறேன். வெள்ளைக்காரன் கதைப்பாடல் தமிழ் அன்னையின் மலரடிகளில் பணிவுடன் படைக்கப்படுகிறது.

அன்பன்
ஏ. என். பெருமாள்

பொருளடக்கம்

			பக்கம்
	முன்னுரை		iii
	நன்றியுரை		v
1.	வெள்ளைக்காரன் கதையின் சிறப்புக் கூறுகள்	—	1
2.	வெள்ளைக்காரன் கதை	—	27
3.	விளக்கவுரை	—	61
4.	Brief Estimate of Vellaiakkaran Ballad	—	87
5.	சொல்லகராதி	—	100

வெள்ளைக்காரன் கதையின் சிறப்புக் கூறுகள்

வெள்ளைக்காரச்சாமி

இந்திய நாட்டை முன்பு ஆட்சி செய்த ஆங்கில நாட்டு மக்கள் வெள்ளை நிறமுடையவர்களாக இருந்ததனால் அவர்களை இந்திய மக்கள் வெள்ளைக்காரர் என்று குறிப்பிடுவது வழக்கம். அத்தகைய ஆங்கில நாட்டுக்காரன் ஒருவனைத் தெய்வமாகக் கருதி நாட்டுப் புற மக்கள் வணங்கி வருகின்றனர். அந்த வழிபாடு இன்றும் பூவியூர், பூசைப்புரைவிளை ஆகிய இரு ஊர்களிலும் நடைபெற்று வருவதைக் காணலாம்.

இவ்விரு ஊர்களும் கன்னியாகுமரிக்கு மூன்று கல் தொலைவுக்கு மேற்கே அடுத்தடுத்து உள்ளன. இங்கு வெள்ளைக்காரச் சாமிக்குக் கோயில்கள் உள்ளன. ஆனல் செங்கிடாய்க்காரன் என்ற தெய்வத்தை முதன்மையாகக் கொண்ட கோயிலுக்கு அருகில் அதற்கு அடங்கியதாகவே வெள்ளைக்காரச் சாமியின் கோயில் காணப்படுகிறது. பெரும்பாலும் தைமாதம் செங்கிடாய்க் காரனுக்குக் கொடை (விழா) நடத்திய பின்னர், வெள்ளைக்காரச் சாமிக்குக் கொடை நடத்தப்படுகிறது.

வெள்ளைக்காரச் சாமிக்குப் பெரிய அங்கி, நீண்ட கால் சட்டை, தொப்பி, மூடு செருப்பு (Boots) ஆகியவை ஆடையணிகளாகக் கோயிலுக்குள் வைக்கப்பட்டுள்ளன. கைத் துப்பாக்கி ஆயுதமாக அங்கு உள்ளது. ஒரு மர நாற்காலி இருக்கையாகப் போடப் பெற்றுள்ளது. சாராயம், பிராண்டி, விஸ்கி, சுருட்டு,

சுட்ட கோழி இறைச்சி, ஆட்டு இறைச்சி ஆகியவை படையலாக வைக்கப்படுகின்றன. ஆவேசமுற்று ஆடுபவன் மது மாமிசத்தை உண்டவாறு ஆங்கில மொழியில் பேசுவது போன்று புரியாத ஒலியில் உளறியவாறு ஆடுகிறான். துப்பாக்கியைக் கையில் பிடித்துக் கொண்டு ஒரு பறவையை நோக்கிச் சுடுவது போன்று சைகை செய்கிறான். ஒரு கண்ணாடியைக் கையில் வைத்துக் கொண்டு தூரத்தில் எதையோ ஒன்றைக் கூர்மையாகப் பார்ப்பது போன்று பார்க்கிறான். மக்கள் இவ்வாறு ஆடுவதைக் கண்டதும் வெள்ளைக்காரனே தங்கள் முன் வந்து விட்டதாகக் கருதி அச்சமும் பக்தியும் கொண்டு சூழ்ந்து நிற்பர். அவனிடம் தங்களுக்கு ஆதரவான வரத்தை வேண்டிப் பணிந்து வணங்குவர்.

இத்தகைய வணக்கம் எவ்வாறு தோன்றியது என்பதை அறிய வெள்ளைக்காரச் சாமியின் கதை தெரிய வேண்டும். வரலாற்றின் அடிப்படையில் இனிமையான பாடல்களால் எழுதப் பெற்றுள்ள கதையைக் கொடை விழாக் காலங்களில் புலவர்கள் வில்லில் பாடி மகிழ்வர். மக்கள் அதனைக் கேட்டுச் சுவைப்பர். கதையை நன்றாகப் படித்துப் பின்னர் ஆழமாகச் சிந்தித்தால் அரிய கருத்துக்கள் முகிழ்க்கும் என்பது உண்மை.

கதையின் தோற்றம்

பதினெட்டாம் நூற்றாண்டின் இடைப் பகுதியிலிருந்தே பரவலாக ஆங்கில ஆதிக்க ஆட்சியின் சாயல் இந்திய நாட்டில் படர்ந்திருந்ததை வரலாறு விளக்கிக் கூறும். ஒரு சில இடங்களைத் தவிர மீதி அனைத்து இடங்களும் வெள்ளையரின் ஆட்சிக்கு உட்பட்டே இருந்தன. 'சுதேச சமஸ்தானங்கள்' என்று அழைக்கப்படும் சில பகுதிகள் ஆங்கிலேயருடைய நேரான ஆட்சிக்குக் கீழில்லா விட்டாலும் மறைமுகமாக இவர்களுக்கு அடக்கமாகவே காணப்பட்டன. இந்தியாவின் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும் மக்கள் அனைவரும் ஆங்கிலேயரை மதித்து அவர்களுக்கு அடிபணியும் இயல்பினராகத்தான் காணப்பட்டனர். அந்த முறையில் இந்தக் கதைப் பாட்டுக்கு உரியவனான வெள்ளைக்காரனை அவன்

வாழ்ந்து வந்த பகுதி மக்கள் சிறப்பாக மதித்தனர். அவனிட்ட வேலைகளை விரும்பிச் செய்தனர்.

இந்தக் கதைப்பாடல் தலைவனாக வரும் வெள்ளைக்காரன் குறிப்பிட்ட பூரிடத்தை ஆட்சி செய்யும் அதிகாரமுடையவனாக இருக்க வேண்டும். இவனுக்கு நல்ல படைபலம் இருந்ததாக அறிய முடிகிறது.

> 'சிந்தை மெய்க்க மனமகிழ்ந்து சிறந்த நல்ல காலாளும்
> துப்பாக்கி செய்யு கின்ற துரைவெள்ளைக்காரர்களும்
> துரிதமுடன் பீரங்கி செய்யும் வெள்ளைக் காரர்களும்
> வெள்ளைக்கரார் பாளையமும் மிக்க படைத் தலைவருடன்
> வேண்டும் வண்ணம் படைகரியும் வேந்தர்களும் புடைசூழ
> அடக்கி யரசாண்டிருந்தார் ஆணழகன் பரங்கித்துரை
> (12—17)

காலாள் படை, துப்பாக்கிப்படை, பீரங்கிப் படை ஆகிய வற்றைக் கொண்டு பாளையக்காரர், படைத்தலைவர் முதலியோர் சூழ்ந்திருக்க நாட்டைப் பராமரித்து வந்தான் என்று கதைப்பாடல் கூறுவதின் மூலம் கதைத் தலைவனாகிய வெள்ளைக்காரனின் உயர்ந்த அதிகார நிலை புலப்படுத்தப்படுகிறது.

இத்தகைய உயர்நிலையிலிருந்தவனை மக்கள் மிகவும் மதித் திருப்பர் என்பது உறுதி. அவன் விரும்பியதை எல்லாம் மன முவந்து செய்து அவனுடைய மதிப்பையும் பாராட்டையும் பெற முயன்றுள்ளனர். இவ்வாறு மதிக்கப் பெற்ற வெள்ளைக்காரன் லண்டன் மாநகரிலிருந்து கப்பலில் கன்னியாகுமரி நோக்கி வருகிறான். அவனுடைய வருகை உறுதியாக மக்கள் எதிர் கொண்டு வரவேற்கத் தக்கதாகத்தான் இருந்திருக்க வேண்டும். ஆனால் சற்றும் எதிர் பாராத விதமாகக் கப்பல் கரை சேராது உடைந்து விடுகிறது. வெள்ளைக்காரன் கடலில் மூழ்கி இறந்து விடுகிறான்.

வெள்ளைக்காரனின் இறப்பு மக்களுக்கு மிக்க அதிர்ச்சியைத் தரும் செய்தியாக இருந்திருக்க வேண்டும். தங்களால் மிகவும் மதிக்கப்பட்டவன் ஏன் இவ்வாறு இறந்தான் என்ற வினா அவர்களிடையே எழுந்திருக்க வேண்டும். மிகப் பெரிய பதவி வகித்தவன் இப்படி இறக்க ஏதாவது காரணம் இருக்கவேண்டாமா? என்ற எண்ணம் அவர்களின் மனத்தை அரித்திருக்க வேண்டும். மனிதரில் சிறந்த வெள்ளைக்காரனை ஒரு தெய்வத்தால்தான் கொன்றிருக்க முடியும் என்று அங்குள்ள நாட்டுப்புற மக்கள் கருதி இருக்கலாம். அது அக்காலத்தின் நம்பிக்கையின் அடிப்படையைச் சார்ந்த எண்ணம் என்று கருதுவதில் தவறில்லை.

மக்கள் இறை நம்பிக்கை மிகுதியாகக் கொண்டு வாழ்ந்த காலமாக அது உள்ளது. பல விதமான தெய்வங்களை வணங்கினர். அவை பழிக்குப் பழியாகப் பலி வாங்கும் இயல்பை உடையதாக மக்கள் நம்பி இருந்தனர். வெள்ளைக்காரனின் கப்பல் உடைந்த இடம் பாறைகள் நிறைந்த கடல் பகுதி. கரையில் மன்னன் தேவன் பாறையில் மக்கள் செங்கிடாய்க்காரன் என்ற நாட்டுப்புறத் தெய்வத்துக்குப் படையல் செய்வது வழக்கம். அந்தப் பாறையின் பக்கத்தில் வரும் போது கப்பல் உடைந்து விட்டதனால் அதில் உறைந்துள்ள செங்கிடாய்க்காரனின் கோபம் தான் வெள்ளைக்காரனின் சாவுக்குக் காரணமாக இருக்கவேண்டும். என்று மக்கள் கருதினர். இன்றும் நாட்டுப்புற மக்களின் மத்தியில் அத்தகைய நம்பிக்கை வேரூன்றி இருப்பதைப் பல இடங்களில் காணலாம்.

ஏன் செங்கிடாய்க் காரனுக்கு வெள்ளைக்காரன் மேல் கோபம் ஏற்பட்டது என்ற வினா அடுத்து எழுந்திருக்க வேண்டும். செங்கிடாய்க்காரன், இசக்கி, நீலன், வாதைகள் போன்ற பல்வேறு நாட்டுப்புறத் தெய்வங்கள் ஆல், அரசு, வேம்பு, அத்தி முதலிய. மரங்களைப் பற்றி உறைவதாக மக்கள் நம்பி அத்தகைய மரங்களுக்கு வழிபாடு செய்து வணங்குவதைப் பல இடங்களில் காணலாம்.

இந்தக் கதைப்பாடல் குறிப்பிடும் வெள்ளைக்காரன், தனக்கென ஒரு கப்பல் செய்வதற்கு பல மரங்களை வெட்டுகிறான்.

கொடி மரத்துக்காக அவன் தெரிந்தெடுத்தது மிக நீளமாக உயர்ந்து வளர்ந்த மரம். அதைப் பார்த்ததும் அதில் மிகவும் ஆற்றல் வாய்ந்த தெய்வமான செங்கிடாய்க்காரன் பிணைந்திருப்பதாகக் கருதுகின்றனர்.

'சிவனுடைய கைலையிலே திருவேள்வி தனிற்பிறந்த
வேள்வியிலே பிறந்துவந்த வீரன்செங் கிடாய்க்காரன்
வரம்வாங்கிச் செங்கிடாய்க்காரன் வந்துறைந்த
கொடிமரந்தான்
ஒத்துநேராய் வளர்ந்தமரம் உயர்ந்தகொடி மரமுட்டில்
சந்தன மரமெனவே தானுறைந்தான் செங்கிடாய்க்
காரன்'

(143—147)

என்று தெய்வத்தின் மரத்துறைவைக் கதைப்பாடல் விளக்கிக் காட்டுகிறது.

பரங்கித்துரை அந்த மரத்தை வெட்டி வீழ்த்தும்படி ஆணையிடுகிறான். அவன் சொல்லுக்கு மறுப்புக் கூற அங்கு யாருக்கும் வாயில்லை.

'வெட்டு மென்று பரங்கித் துரையவர்
விரைவாய் மாந்தையர் தம்மிடம் சொல்லவே
சொன்ன வார்த்தையை மாந்தையர் கேட்டுமே
துரித மாக மழுக்கொண்டு வெட்டினார்'

(152—153)

மரத்தை வெட்டும்போது அதிலிருந்து மரப்பால் ஊறிப்பாய்வது இயற்கை இந்த மரத்தின் பால் சிவப்பு நிறமாக வழிந்திருக்க வேண்டும். அதைக் கண்டதும் செங்கிடாய்க் காரனின் குருதி கொட்டுவதாக நம்பி விடுகிறார்கள். தெய்வம் உறைந்த மரத்தை வெட்டியது தவறென மக்கள் கருதுகிறார்கள். ஆகையினால்

விரைவில் தெய்வம் பழிக்குப் பழி வாங்கி விடும் என்று நினைக்கிறார்கள்.

செங்கிடாய்க்காரனின் கோயிலுக்கு அருகில் கப்பல் உடைந்து வெள்ளைக்காரன் கடலில் மூழ்கி இறந்ததும், அந்தத் துன்ப நிகழ்ச்சியை முன் நடந்த செயலான மரம் வெட்டியதுடன் இணைத்துப் பார்த்து அது தெய்வக் கோபத்தின் விளைவு என்று கருதி விடுகின்றனர். இத்தகைய மக்களின் நம்பிக்கை உணர்வை அடிப்படையாகக் கொண்டு, நடப்பு நிகழ்ச்சியுடன் கற்பனையை நன்றாகக் கலந்து நாட்டுப் புற மக்களின் மனதைக் கவர இந்தக் கதைப் பாடல் புனையப்பட்டிருப்பதாகக் கருதலாம்.

வரலாற்று உண்மை, மக்களின் நம்பிக்கை, கவிஞனின் கற்பனை ஆகியவற்றின் கூட்டுச் சேர்க்கையாக இந்த வரலாற்றுக் கதைப் பாடல் அமைந்துள்ளது. துணுக்குறும் செயல்களைப் பற்றிப் பாடுவதும் அவற்றைப் பாடிக் கேட்பதும் நாட்டுப் புற மக்களின் இயல்பான ஆவல்களாகும். வெள்ளைக் காரனின் வாழ்வும் சாவும் மக்களைக் கவர்ந்ததனால் அந்த வாழ்வை இனிய கதைப் பாடலாகப் புலவர் பாடியுள்ளார்.

கதையின் அமைப்பு

வெள்ளைக் காரச் சாமியின் கதை நாட்டுப் புறப் பாடலமைப்பில் ஒரு நாட்டுப் புறப் பாடல் ஆசிரியரான முத்தையா நாடார் என்பவரால் பாடப் பெற்றுள்ளது. முதன் முதலாக இறை வணக்கப் பாடலாக இரண்டு காப்புச் செய்யுட்களைப் பாடிப் பின்னர் ஆசிரியர் குறிப்பு, பாடல் புனைந்த காலக் குறிப்பு ஆகியவற்றைத் தந்து கதையைத் தொடங்குகிறார்.

இந்தக் கதை யாரைப் பற்றியது என்ற குறிப்பை முதலில் தருகிறார்.

> 'நாடான நாடதிலே நல்ல லண்டன் பட்டினத்தில்
> தேசமான தேசத்திலே சிறந்த லண்டன் பட்டினத்தில்
> பாரடக்கி அரசாண்ட பரங்கித் துரைதன் கதையை'

என்று பாடுவதில் இக்கதைத் தலைவன் லண்டன் நகரைச் சேர்ந்த ஒரு துரைத்தனத்தான் என்ற உண்மை காட்டப்படுகிறது. இந்தப் பரங்கித் துரைக்குத் துணையாகச் சின்னத்துரை என்பான் இருக்கிறான். மேலும் சமையல் வேலை செய்யும் குசினிக்காரரும் உள்ளனர். மேலும் காலாள் படை, துப்பாக்கிப்படை, பீரங்கிப் படை ஆகியவையும் உள்ளன. யானைப் படையும் பல உள் நாட்டு அரசர்களும் பரங்கித்துரையைச் சூழ்ந்திருக்க அவன் மேலாண்மையுடன் ஆண்டு கொண்டிருக்கிறான். கதையின் அறிமுகம் இவ்வாறு கூறப் பெற்றுள்ளது.

எல்லா விதமான வசதிகள் இருந்தாலும் இந்தப் பரங்கித் துரைக்குக் கப்பல் இல்லாத குறை உள்ளது ஆகையினால் தனக் கென ஒரு கப்பல் கட்டத் தீர்மானிக்கிறான். உடனே சின்னத் துரையுடன் கலந்து ஆலோசித்துக் கப்பல் ஒன்றைச் செய்யத் தீர்மானிக்கிறான். மாந்தையர்கள் என்று அழைக்கப்படும் கப்பல் கட்டும் தொழிலாளர்கள் வருவிக்கப்படுகிறார்கள்,

கப்பல் கட்டுவதற்குத் தகுதியான மரங்களை வெட்டுவதற்காகக் காட்டுக்குச் செல்கின்றனர் அவர்கள் காட்டுக்குச் சென்ற காட்சி மிகச் சிறப்பாகக் கதைப் பாடலில் விளக்கப் பெற்றுள்ளது.

காலாளும் பெரும்படை சேரவே
கனத்தநல்ல புரவியும் ஒட்டகம்
ஏனையோடு புரவிகள் கூட்டமும்
ஏற்றநல்ல துரைமாரும் சேரவே
மாந்தையர் கொத்தமார்களும் சேரவே
வரிசையாகவே வண்டிகள் சேர்த்தனர்
சேர்த்து வண்டிக்கிடாக் களைப்பூட்டியே
சிறந்த மாந்தையர் கொத்தமார் கூடியே

கூடியே லண்டன் பட்டணம் விட்டவர்,
கூண்ட மாமலை தன்னையும் நோக்கினர்'

(49—53)

அவர்கள் அனைவரும் கூடிவந்த மாமலை வடமேற்கு பர்வதம் ஆகும். அந்த மலையின் இயற்கை வளம் விளக்கப்படுகிறது. குறிப்பாக அவர்கள் மரம் தேடி வந்த மலைப்பகுதி காக்காச்சி சந்தன மலை என்று அழைக்கப்படுகிறது.

காட்டில் பலவகையான மரங்கள் நிரம்பியுள்ளன. ஆயினும் கப்பல் கட்டுவதற்கு ஏற்ற மரங்களைத் தெரிந்தெடுத்து வெட்டுதல் வேண்டும். என்னென்ன மரங்கள் தகுதியானவை என்பதைக் கதைப் பாடல் மிக விரிவாகக் கூறுகிறது.

'தேடரிய சந்தனமும் திடமான ஆசனியும்
தெரிந்தாற் கப்பற் காகுமென்று சொல்லி
வாட்டமில்லா மாமருது வண்டாளை குருந்திநெல்லி
வல்லிபூரம் கொல்லியு மாகாது.
அத்தியித்தி ஆலரசு அடுக்கடுக் காய்நெல்லி
ஆத்திதிரு வாத்தியு மாகாது
ஆலரசு பூவரசு ஆளிபுளி தேளுளுவை
ஆணிஞ்சி குருவிஞ்சியு மாகாது
வெத்திகருங் காலிநல்ல வில்லைபூரம் கொல்லிகுமிழ்
வேங்கைகரு வேங்கையு மாகாது
தேடிவந்த மாந்தையர்கள் சிறந்தபரங் கித்துரையும்
சிறந்தமரம் பார்த்துவெட்ட வேணும்'

64—(69)

ஆகாத மரங்கள் பலவற்றைக் கூறி ஒதுக்குவதைக் காணலாம். பின்னர் மஞ்சணத்தி, வண்டாளை, மாமருது, தேக்கு, சந்தனம், கருநாங்கு, புன்னை, காரிலுப்பை வெண்ணாங்கு முதலிய

மரங்களைப் பார்த்து வெட்டியதாகச் சொல்லப்படுகிறது. மரங்களை வண்டிகளில் ஏற்றி வருகின்றனர்.

மரங்களுடன் லண்டன் பட்டினத்துக்குப் பரங்கித் துரை வந்ததாகக் கதைப்பாடல் குறிப்பிடுகிறது. (77)

மரவேலை செய்யும் ஆசாரிமார் (தச்சர்) வெள்ளைக்காரர்களுடன் கப்பல் கட்டும் பணியைச் செய்கிறார்கள். பலகைகளை அறுத்து அவற்றை இரும்பு ஆணிகளைக் கொண்டு இணைத்துக் கப்பலில் பல்வேறு தட்டுகள் வைக்கின்றனர். இது வாணிபக் கப்பலாக இருப்பதினால் வேறு வேறு பொருட்களை வைக்க வேறு வேறு அறைகள் அமைக்கப்படுகின்றன.

'பட்டுச் சேலை வைப்பதற்குப்
பாங்குடனோர் அறையும் வைத்தார்
பழம்தேங்காய் பலவும் வைக்கப்
பாவினையாய் அறையும் வைத்தார்
ஆடு மாடு கோழிபன்றி
அடைக்கவோர் அறையும் வைத்தார்
அரவணிந்தான் அருளாலே
அமைத்தாரே பலவறைகள்' (90—93)

இவ்வாறு இன்னும் பல அறைகள் கப்பலில் அமைத்த செய்திகள் மிகமிக விரிவாக சொல்லப்படுகின்றன.

ஏழு தட்டுக்களுடன் (மாடிகள்) கப்பல் மிகவும் பெரிதாகச் செய்யப்படுகிறது. ஆனால் கொடிமரம் இன்னும் நாட்டப்படவில்லை. அதற்குரிய நீண்ட மரம் கிடைக்கவில்லை. பரங்கித் துரை வருந்தி கொடிமரத்துக்கு உரிய நெடுமரம் ஒன்றைத் தேடுமாறு ஆணையிடுகிறான். திரும்பவும் மலைக்கு வந்து மரம் தேடி அலைகிறார்கள்.

'காக்காச்சி மலைதனிலே கழுகன்திட்டுப் பாறையிலே
திட்டவட்டப் பாறையிலே சென்றவர்கள் வரும்போது'

(140-141

ஒரு நேரான வளர்ந்த மரத்தைக் காண்கிறார்கள். அதில் சிவனிடம் வரம் வாங்கிய தெய்வமான செங்கிடாய்க்காரன் உறைந்திருப்பதை அறியாமல் வெட்டுகின்றனர்.

'வெட்ட வேமரம் உதிரமாய்ச் சாயவே
விதிவருவ தறியாமல் வெட்டினார்' (154)

மரத்தைக் கொண்டு லண்டன் பட்டினத்துக்கு வருகிறார்கள்.

நாட்டுப் புறக் கதைப் பாடல்கள் தெய்வங்களின் ஆற்றலைப் பற்றிய செய்திகளை இணைத்துக் கொள்வதை மக்கள் விரும்புவதனால் புலவர்கள் கதைப் போக்கில் ஆங்காங்கே தெய்வங்களின் ஆற்றலைச் சுட்டிச் செல்வதைத் தங்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனர். வெள்ளைக்காரனின் கதை பாடப்படும் இடம் செங்கிடாய்க்காரத் தெய்வத்தின் ஆற்றலையும் வீரத்தையும் நம்புவதாகும். ஆகையினால் இக்கதைப்பாடலில் பல இடங்களில் அத் தெய்வத்தின் பழிக்குப் பழி வாங்கும்தன்மை, வேகமான போக்கு, பேராற்றல் போன்றவை குறிப்பிடப்படுகின்றன. கொடி மரத்துக்கு வேண்டிய மரத்தை வெட்டியதிலிருந்து கதையின் இறுதிவரைச் செங்கிடாய்க்காரனின் வலிமையும் தன்மையும் குறிப்பிடப்படுகின்றன. கொடிமரக் கம்பத்துடன் இணைந்து செங்கிடாய்க்காரனும் லண்டன் பட்டினத்துக்கு வந்து விட்டதாகக் கதைப் பாடல் கூறுகிறது.

தமிழ் நாட்டுக் காட்டிலுள்ள மரத்தை வெட்டி லண்டனுக்குக் கொண்டு வந்து தமிழ் நாட்டுப் பணியாளர்களைக் கொண்டு கொடி மரம் செய்து கப்பலில் நிறுத்திய செய்தியைக் கதைப் பாடல் சுவையாகக் கூறுகிறது.

'பையப் பைய நகர்த்தி மலைவிட்டு
பரபரன்ன வழிகள் நடந்துதான்
செப்ப மான பரங்கித் துரையவர்
சிறந்த லண்டன் பட்டணத்தில் வந்தாரே'

இந்த இரண்டு பாடலடிகளின் வாயிலாக மரத்தை மலையிலிருந்து கொண்டு வந்த கடினமான செயலையும் பின்னர் அதனை லண்டனுக்குக் கொண்டுபோன செய்தியையும் அறிய முடிகிறது.

'கொடிமரத்தைக் கொண்டுவந்து கொத்தன்மார்கள் தாம் [பார்த்து
செப்பமுள்ள கொடிமரத்தைச் சிறக்கும்படி வேலைசெய்து
ஒப்பமுடன் மாந்தையர்கள் ஒன்றுபோலே தாங்கூடி
கூடியந்தக் கொடிமரத்தைக் கப்பலிலே தானிறுத்தி'

(165-165)

கொடிமரத்தைத் தச்சர்கள் கூடிச் செய்து கப்பலில் நிலைநிறுத்தியதை இவ்வடிகளினால் நன்கு அறிலாம். கப்பலில் எஞ்சின், புகைக் குழாய், பாவுமரம், சிறுதோணி ஆகியவை இணைக்கப்படுகின்றன நல்ல முறையாகவும் முழுமையாகவும் முடிக்கப்பட்ட கப்பல் இந்தியாவுக்கு வருவதற்காக டோவர் ஜலசந்தித் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. செங்கிடாய்க்காரனும் அதில் மறைவாக உறைந்திருக்கிறான்.

பரங்கித்துரை, சின்னத்துரை, உதவியாளர் அனைவரும் ஏறி அமர்கிறார்கள். சுக்கானைத் திருப்பியதும் கப்பல் டோவர் துறைமுகத்தை விட்டு திடுதிடென ஓடத் தொடங்கியது. இங்கிலீஷ் சானலை விட்டுக் கப்பல் பிரிஸ்டல் நகருக்கு வருகிறது. அங்கிருந்து கன்னியாகுமரியை நோக்கி வந்து கொண்டிருக்கும் கப்பல் கடந்து சென்ற இடங்கள் வரிசையாக அடுக்கிச் செல்லப்படுகின்றன.

இங்கிலாந்தின் தென்கிழக்குப் பகுதியிலிருந்தும் டோவர் (Dover) துறைமுகத்திலிருந்து கப்பல் புறப்படுகிறது. அது டோவர் நீரிணைப்பு (ஜலசந்தி) வழியாக வந்து கொண்டிருக்கிறது. இங்கிலீஷ் சானலைக் கடந்து பிரான்ஸ் நாட்டின் வடமேற்குப் பகுதியிலிருக்கும் பிரஸ்று நகருக்கு (Brest) வருகிறது. பின் பெல்லித் தீவு (Belley) வழியாகத் தெற்கு நோக்கிப் பயணமாகிறது. பிஸ்கே குடா (Bay of Biscay) கடந்து ஆட்டுக்கால் முனை (Cape of Ortegal) வந்தடைவதில் ஸ்பெயின் நாடு (Spain) தட்டுப்படுகிறது. அங்கு கோயின்பாரு நகர் (Coinbra) உள்ளது. அந்த நகரைக் கடந்து போர்த்துக்கல் நாட்டின் (Portugal) தலைநகரமான லிஸ்பன் நகருக்கு (Lisban) வருகிறது. அடுத்து ராக்கா முனை (Cape of Roca) வழியாக செயிண்ட் வின்சன்ட் முனையைத் (Cape of Vincent) தொட்டு

மிகவும் விரைவாகச் சிவிலாடர் நீரிணைப்பை (Strait of gibralter) வந்தடைகிறது. பின்னர் சிவிலாடர் நகரின் வழியாக மத்தியரேகைக் கடலில் (Mediteranian Sea) வந்து சேருகிறது.

இதுவரைத் தெற்கு நோக்கி வந்துக் கொண்டிருந்த கப்பல் இனி ஸ்பெயின் பிரான்ஸ் ஆகிய நாடுகளின் தென் கிழக்குக் கடற் கரை ஓரம் வடகிழக்கு நோக்கிப் பயணம் ஆகிறது. அப்பகுதி யிலிருக்கும் சிங்கக் குடாவின் (Bay of Lion) வழியாகத் தூஸனப் பட்டணம் (Toulouse) கடந்து ஜுவா குடாவைக் (Bay of genoa) கடந்து இத்தாலியின் (Italy) மேற்குக் கரை ஓரமாகத் தெற்கே திரும்புகிறது.

பின்னர் கார்ஸிகாத் தீவு (Carsica) சார்டேனியாத் தீவு (Sardania) ஆகியவற்றின் பக்கம் வழியாகச் சென்று ரோமாபுரி (Rome) நகருக்கு வருகிறது. அடுத்து நேப்பிள்ஸ் நகர் (Naples) கடந்து இத்தாலிக்கும் சிசிலிக்கும் (Sicily)) இடையிலுள்ள மேஜினா நீரிணைப்பு (Strait of messina) வழியாகக் கிழக்கே திரும்புகிறது) கப்பல் கடந்த பகுதி அட்ரியாடிக் கடல் (Adaritic Sea) என்பதையும் அவ்வழியில் டோராண்டோ குடா (Bay of Tarento) இருப்பதையும் கதைப்பாடல் கூறுகிறது.

அட்ரியாடிக் கடலைக் கடந்து வரும் போது சிசிலித்தீவின் கிழக்குப் பகுதியிலுள்ள ராமக்கா முனை (Cape of Ramacca) தட்டுப் படுகிறது. கிழக்கு நோக்கி கிரீஸ் (greece) வழியாகக் காண்டியாத் தீவைக் (Candia) கடந்து சைப்பிரஸ் தீவைக் (Cyprus) தாண்டி பெய்ருட் நகரை (Beirut) அடைகிறது. அடுத்து சூயஸ் நகரைச் (Sueyz) கடந்து செங்கடலுக்குள் (Red Sea) கப்பல் வந்து சேர்கிறது. ஜித்தா துறைமுகம் (Jidda), ஏடன் நகர் (Aden), பலப்பலத் தீவுகள் ஆகியவற்றைக் கடந்து ஏடன் குடாவின் வழியாக மாசிரா நகருக்கு (Masira) வந்து சேர்கிறது. ஓமன் குடாவுக்குள் (Gulf of Omen) புகுந்து மளமளவென்று ஓடிக் கப்பல் அரபிக் கடலுக்குள் (Arabian Sea) வருகிறது.

அரபிக்கடலில் கிழக்கு முகமாகப் பயணமாகி இந்தியாவின் மேற்குக் கடற்கரையைக் கப்பல் வந்தடைகிறது. கட்சுக் குடாக் கரையிலிருக்கும் கட்சு நகர் (Katch) வழியாகப் பல தீவுகளைத் தொட்டு சோமநாத நகருக்கு வருகிறது. பின்னர் காம்பே குடா (gulf of Cambay) சென்று சூரத் (Surat) நகரை அடைகிறது அங்கிருந்து திடுதிடென ஓடி மாம்பேன் (Bombay) நகரைக் கடந்து கோவாவின் தலைநகரான பஞ்சிம் (Panjim) நகருக்கு வருகிறது.

கன்னியாகுமரியை விரைவில் கண்டடைய வேண்டும் என்ற ஆவலில் வெள்ளைக்காரன் (பரங்கித்துரை) கப்பலை விரைவாகச் செலுத்துகிறான். பஞ்சிம் நகரிலிருந்து தெற்கே கப்பல் கடந்து சென்ற இடங்கள் அனைத்தும் குறிப்பிடப் பெறுகின்றன. அவை கார்வார் நகரம், மங்களூர், மாகிநகரம், கேலிகட் பட்டணம், (Calicut - கள்ளிக்கோட்டை), காயங்குளம், கொச்சித் துறைமுகம், வேம்ப நாட்டுக்காயல், காயல் பட்டணம், ஆலப்புழை, கொயிலோன் துறை முகம் (Quilon - கொல்லம்), அஞ்சின் துறைமுகம், திருவனந்தபுரம் குளச்சல் நகர், மண்டைக்காடு, மணவாளக்குறிச்சி, பொழிற்கரை, பிள்ளைத் தோப்பு, ராசக்க மங்கலம், பள்ளம், நச்சுப் பொய்கை, குமரன்தாழை, மணக்குடி, பொழிமுகம், மண்கோட்டை அஞ்சு, பனை மூடு, தலைக் குளம், கோவைக் குளம், கல்லு, குருசடி ஆகிய இடங்களாகும். பின்னர் தவிட்டுத் துறை வந்ததும் கப்பல் உடைந்து சிதறுகிறது. பரங்கித் துரையும் அவனோடு வந்தவர்களும் கடலில் மூழ்கி இறக்கின்றனர்.

வரிசையாகக் கப்பல் வந்த இடங்களைக் கூறும் நாட்டுப் புறக் கதைப் பாடலாசிரியர் பின் வர வேண்டிய சில இடங்களை முன் கூறியுள்ளார். காயங்குளம், கடிய பட்டினம் ஆகியவை அவ்வாறு மாறியுள்ளன. மேனாட்டிலுள்ள இடங்களை எல்லாம் மிகவும் நுட்பமாக ஒழுங்கு பிறழாது கூறியவர் தான் வாழும் இடத்துக்கு மிக அண்மையிலுள்ள இடங்களை மாற்றமுறக் கூறியுள்ளார். ஓரளவு கேள்வியறிவில் புதுநூலறிவு உள்ளவராகத்தான் இருக்க வேண்டும். இவ்வேடு எழுதிய ஆசிரியர் முன்பு வாய்மொழிக் கதையாக இருந்ததை முறைப்படுத்தி வில்லில் பாடுவதற்கு ஏற்ற முறையில் எழுதியதாகக் கூறப்படுகிறது. எழுத்தி மூன்று

இடங்களைக் குறிப்பிட்டுள்ள ஆசிரியர் இரண்டே இரண்டு இடங்களில் மாத்திரம் வரிசை தவறி இருப்பதைப் பெருங்குறையாகக் கருதுவதற்கு இல்லை ஒரு நாட்டுப்புறப் புலவர் இவ்வாறு புவியியல் அறிவுடன் பாடியிருப்பது மிகச் சிறப்பித்துக் கூறத்தக்கதாகவே உள்ளது.

கப்பலுக்குக் கொடிமரம் வெட்டியதிலிருந்து அந்த மரத்தில் தெய்வமாக உறைந்திருந்த செங்கிடாய்க்காரன் கோபம் கொண்டு மரம் வெட்டுவதற்குக் காரணமாக இருந்த பரங்கித் துரையைக் கொல்லச் சமயம் பார்த்துக் கொண்டே இருக்கிறான். அவனோடு துணையாக அவனுடைய சகோதரியான கபாலக்காரியம்மனும் இருக்கிறாள். இடையிடையே செங்கிடாய்க்காரனின் நோக்கத்தைக் கதை ஆசிரியர் சுட்டிக் காட்டிக் கொண்டு செல்வது குறிப்பிடத் தக்கதாகும். காக்கையாகவும் பருந்தாகவும் மாறிக் கப்பலை அசைப்பதாகக் கூறுகிறார். பரங்கித்துரை ஐயங்கொண்டு அந்த மாயப் பறவையைச் சுடுவதற்கு முயல்வதையும் குறிப்பிட்டுள்ளார்.

தவிட்டுத் துறையில் கப்பல் வந்ததும் செங்கிடாய்க்காரன் மிகவும் வேகமாகத் தாக்க முற்படுகிறான்.

> •தவிட்டுத்துறை யானதிலே தான்வரவே கப்பலது
> தாக்கன் செங்கிடாய்காரன் சிறந்தகப்பல் ஆனதையும்
> செறுத்தவனும் தாக்கவென்று செம்பருந்தாய் வடிவெடுத்
> [தான்
> (434-436)

செம்பருந்து வடிவில் வேகமாகக் கொடிமரத்தைச் செங்கிடாய்க்காரன் அசைக்கிறான். பரங்கித்துரை வெடியெடுத்துச் சுடுகிறான். ஆனால் செங்கிடாய்க்காரன் மறைந்து விடுகிறான். பின்னர் கப்பலைத் திடுதிடென்று அசைக்கிறான். சின்னத்துரை நடந்தது அறியாமல் திகைக்கிறான். கப்பலைச் செலுத்த முடியாமல் செயல் மறந்து நிற்கிறான். அப்பொழுது,

மறைந்து அந்த மரக்கலத்தை மகாதேவர் திருவருளால்
மடமடென்னத் தாழ்த்தி விட்டான் மாண்டனரே துரை
[மார்கள்
வண்டன்பொன் காத்தபெருமாள் மங்கைகவலக்
[காரியம்மை
வன்குலையாய்த் துரைமாரை வழியிலே கொன்று
விட்டார். (459-462)

கன்னியாகுமரிக்குச் செல்வதற்கு முன்பாகவே பரங்கித்துரை கொல்லப்படுகிறான்,

கப்பல் கவிழ்ந்த இடத்துக்குப் பக்கத்திலே மன்னன்தேவன் பாறை உள்ளது. அதில் வலங்கையர் என்ற இனத்தினர் கூடிச் செங்கிடாய்க்காரனுக்குப் படையல் செய்வது வழக்கம். அங்கு படையல் நடந்து கொண்டிருக்கும் போது பரங்கித்துரை தன்னுடைய கூட்டாளிகளுடன் ஆவியுருவில் வருகிறான். செங்கிடாய்க் காரனிடம் வந்து வணங்கி வரம் வேண்டுகின்றான். அவன் மனம் இரங்கிச் சிவனை வேண்டுகிறான். சிவனின் திருவருளால் வெள்ளை காரனுக்கு வரம் கிடைக்கிறது.

மன்னன் தேவன் பாறையிலே பரங்கித்துரைக்கும் அவனுடைய கூட்டாளிகளான சின்னத்துரை, குசினிக்காரர்களுக்கும் பூசனை நடைபெற வேண்டும் என்று முடிவாகிறது.

ஆழியிலே மாண்டவொரு ஆணழகன் துரையவற்கு
அரனருளால் வரமதுதான் அளித்தான் செங்கிடாய்க்
காரன் (489-490)

சிவனுடைய பேரருளின் துணைகொண்டு செங்கிடாய்க்காரன் பரங்கித்துரைக்குக் கொல்ல வரம், வெல்ல வரம் பூசை கொள்ள வரம் கொடுக்கிறான்.

'கோழியோடு சாராயம் கூட்ட நல்ல உஸ்கியொடு
குறையறவே தான்படைத்துக் கூட்டுப்பூசை கொள்ள
வரம்

வள்ளுவனார் திருவருளால் வரங்கொடுத்தான் கிடாய்க்
காரன்

மன்னன்தேவன் பாறையிலே மதித்துப் பூசைகொண்
டிருந்தாரே (493-496)

மன்னன் 'தேவன் பாறையில்தான் முதன்முதலில் வெள்ளைக் காரனுக்குப் படையல் செய்யப்பட்டுள்ளதாக இக்கதைப் பாடல் வாயிலாக அறியலாம். ஆனால் இன்று சற்று உள்பகுதியில் இருக்கும் பூவியூர், பூசைப்புரைவிளை ஆகிய ஊர்களிலும் பூசனை ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது.

வெள்ளைக்காரச் சாமியின் கதை ஒரு நிகழ்ச்சியை முக்கியமாகக் கொண்டுள்ளது. மலைக்குச் சென்று மரம் வெட்டிக் கப்பல் செய்து லண்டன் பட்டினத்திலிருந்து வெள்ளைக்காரன் அந்தக் கப்பலில் கன்னியாகுமரி நோக்கி வரும் போது கப்பல் தவிட்டுப் பாறைக் கருகில் உடைந்து மூழ்கி விடுகிறது. வெள்ளைக்காரன் உடன் இருந்தோருடன் இறந்துவிடுகிறான். உலக இயல்புக்குப் பொருந்தும் இந்த நிகழ்ச்சியுடன் செங்கிடாய்க்காரத் தெய்வத்தின் உலக இயல்புக்கு அப்பாற்பட்ட செயலை இணைத்துக் கதைப் பாடல் உருவாக்கப் பெற்றுள்ளது. இருவேறு கூறுகள் இணைக்கப்பட்டு இந்த கதைப் பாடலின் அமைப்பு மாறுபட்டிருப்பதை நன்கு காணலாம்.

மேலும் அக்காலத்தில் காணப்படும் சில நடைமுறை உண்மை களை உலகுக்கு உணர்த்தவும் இந்நாட்டுப்புறக் கவிஞர் விரும்பி யிருக்கிறார் என்பதும் புலனாகிறது. இங்கிலாந்து நாட்டிலிருந்து இந்தியாவுக்கு வரும் கடல் வழி அக்காலத்தில் மிகவும் புகழுடையது. அதனை அழகாக எடுத்துக் கூறியுள்ளதைக் கதைப் பாடலில் காணலாம். வெள்ளைக்காரர்கள் இந்திய நாட்டிலிருந்து எந்த எந்த பொருட்களை விரும்பித் தங்கள் நாட்டுக்குக் கொண்டு சென்று உள்ளனர். என்பதையும் இக்கதைப் பாடல் வாயிலாக அறிய முடிகிறது.

'பாரமது ஏற்றவென்று பரங்கித்துரை உரைக்கவே
பரபரென்ன சரக்குவகைகள் பாரமது ஏற்றுவார்'
(291-292)

என்று தொடங்கிக் கப்பலில் ஏற்றப்பட்ட பொருட்கள் ஒவ்வொன்றாகக் கூறப்படுகின்றன.

மஞ்சள், சீரகம், மலைத்தேன், கடுக்காய், ஏலக்காய், கொத்தமல்லி, கோழி பன்றி, துவரை, சிறுபயறு, சீனி, சர்க்கரை, தாழ்சபத்திரி, குங்குமம், செந்தூரம், கோதுமை, மல்லிகைச் சம்பா, வால்நீண்ட நெல், மணச் சம்பா, புனுகு, பன்னீர், கதம்பம், குதிரை (புரவி), யானை (கரி), பெருங்காயம், காப்பிக் கொட்டை, தேயிலை, கத்தரி, சீனிக்காரம், மருந்து வகைகள், போன்ற பலவகைக் பொருட்களையும், தனித்தனி அடைத்துக் கப்பலில் வைத்தாக அறியலாம். இவற்றுடன் விஸ்கி, பிராந்தி, சாராயக் குப்பிகளும், அடுக்கி வைக்கப்படுகின்றன.

கதையினூடே இத்தகைய விளக்கங்களின் செருகல்கள் தேவையா என்ற எண்ணம் ஏற்படுவது இயல்பே ஆகும். கதைக்குச் சிறப்புக் கொடுப்பதுடன் அக்கால மரபுமுறைகள் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் நடைமுறைகள் ஆகியவற்றுக்குச் சிறப்பிடம் கொடுக்கப்படுகிறது.

இந்தக் கதைப் பாடலைப் படித்தால் சில வரலாற்றுச் செய்திகள், புவி நூல் உண்மைகள், சமூகக் கூறுகள் ஆகியவற்றை மக்கள் தெரிந்து கொள்ளலாம் இப்பாடல் சரியான முறையில் கதையாக அமையாமல் நிகழ்ச்சி விளக்கமாகக் காணப்படுகிறது. நாட்டுப்புற மக்களுக்கு எளிதாகப் புரியும் முறையில் வில்லில் பாடுவதற்கு ஏற்ற நிலையில் இனிய இசையமைப்புடன் வெள்ளைக்காரன் கதை எழுதப் பெற்றுள்ளது.

(1) பொதுவாக ஊருக்கு நல்லதை நாடுவோர், வீரச்செயல் புரிந்தோர், செயற்கு அரியவற்றைச் செய்தோர், கொடுஞ் செயலை எதிர்த்தோர், தெய்வத்தன்மை உடையோர், வேளாண்மை ஆட்சி

யாளர், இனிய பண்புடையோர் ஆகியோரின் வாழ்வியலைக் கதை யாகப் பாடுவதை நாட்டுப் புறங்களில் காணலாம். சில கதைகளில் புராணக் கதை மாந்தர் தலைவர்களாகச் சிறப்பிக்கப்படுவர். ஆனால் வெள்ளைக்காரன் கதை ஓர் அன்னியனைக் கதைத் தலைவனாகக் கொண்டுள்ளது. வெள்ளையர் மேலதிகாரமுடையவர் என்பது அறிவிக்கப்படுகிறது. ஆயினும் இக்கதைத் தலைவன் யாரென்ற விளக்கக் குறிப்பு தரப்படவில்லை. பெயர் கூறப்படவில்லை. ஆனால் 'தேசமான தேசத்திலே சிறந்த லண்டன் பட்டினத்தில் பாரடக்கி அரசாண்ட பரங்கித்துரை' (2 - 3) என்றும் சிறந்த காலாள்படை, பீரங்கிப்படையுடைய,

'வெள்ளைக் காரர் பாளையமும் மிக்கப் படைத்தலை
[வருடன்
வேண்டும் வண்ணம் படைகரியும் வேந்தர்களும்
[புடைசூழ
அடக்கி அரசாண்டிருந்தார் ஆணழகன் பரங்கித்துரை'
(15-16)

என்றும் கூறப்பட்டிருப்பதனால் இந்த வெள்ளைக்காரனைப் படை களையுடைய ஓர் ஆட்சியாளனாக மக்கள் மதித்துள்ளதாகத் தோன்றுகிறது. அக்கால ஆட்சி இயல்புக்கு ஒத்துக் காண்பதானால் இந்தப் பரங்கித்துரை ஆங்கில ஆட்சிக்கு உரிய ஒரு பகுதி ஆணை யாளனாக இருந்திருக்க வேண்டும்.

(2) நாட்டுப்புற மக்கள் தங்களுக்குச் மிகவும் நன்மை செய்தவர்களையே சிறப்பாகக் கருதிப் பாராட்டுவது வழக்கம். அத்தகையவர்களை மறவாது நினைக்கவேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் நடுகல் நட்டு அதனைப் பாராட்டிப் பூசனை செய் வதையும் காணலாம். வீரர்கள், அரிய செயல் செய்வோர் ஆகி யோரும் அத்தகைய சிறப்புக்கு உரியவர் ஆகிறார்கள். இக்கதைப் பாடல் தவைனான பரங்கித் துரையை மக்கள் வணங்கி வருகிறார்கள் அவனுக்குக் கோயில் கட்டி வழிபாடு நடைபெறுகிறது. இவ்வளவு தூரம் சிறப்புச் செய்வதற்கு உரிய காரணம் என்ன என்பது சிந்தனைக்கு உரியதாகவே உள்ளது.

பரங்கித் துரை மக்களுக்கு வேண்டிய நன்மைகள் செய்தவன் என்ற குறிப்பு இந்தக் கதைப்பாடலில் எந்தப் பகுதியிலும் காணப் படவில்லை. மேலாணை உடைய ஒருவன் என்பதும் அவன் ஒரு பெரிய கப்பலைக் கட்ட மரம் வெட்டினான் என்பதும் அக்காலத்தில் அனைவரும் அறியத் தக்க செய்தியாக இருந்திருக்கும். இங்குள்ள தச்சர்கள் இங்கிலாந்து நாடு சென்று செய்து முடித்த கப்பலில் பரங்கித் துரை வருகிறான் என்ற செய்தியும் மக்களுக்கு மிகப் பெரிதாகவே தோன்றி இருக்கும். பரங்கித் துரை கன்னியாகுமரியில் வந்து இறங்கு வான் என்ற எதிர் பார்ப்பு மக்கள் மத்தியில் இருந்திருக்க வேண்டும். ஆனால் அத்தகைய எதிர் பார்ப்புக்கு மாறாகக் கப்பல் கோவளம் பகுதியில் கடலுக்குள் இருக்கும் தவிட்டுப் பாறைக்கு அருகில் மூழ்கி விடுகிறது. வெள்ளைத் துரை கடலுக்குள் ஆழ்ந்து இறக்கிறான். இது மக்களுக்கு மிகவும் அதிர்ச்சியைத் தந்திருக்கும் என்பது உறுதி.

வலிமையுடையவர்களின் திடீர்ச் சாவுகள் பல விதமான வதந்திகளுக்குத் தோற்றுவாயாக அமைவதைச் சமூக இயல்பாகக் கருதலாம். கப்பல் மூழ்கிய இடத்துக்கு அருகில் ஆற்றல் மிக்க தாகக் கருதப்படும் செங்கிடாய்க்காரத் தெய்வத்தின் கோயில் உள்ளது. அத்தெய்வத்தின் கோபமே இத்தகைய ஓர் அழிவுக்குக் காரணம் என்று மக்கள் கற்பித்துக் கொண்டிருக்க வேண்டும் என்ற கருதுகோள் இங்கு பொருத்தமாகவே அமையும். செங்கிடாய்க் காரனுக்கு ஏன் கோபம் வந்தது என்பதற்குக் காரணமாகக் கொடி மரத்துக்காகக் காட்டில் தெய்வம் உறைந்திருந்த மரம் பரங்கித் துரையால் வெட்டப்பட்ட நிகழ்ச்சி இணைக்கப்படுகிறது.

இன்றும் இத்தகைய நம்பிக்கை நாட்டுப் புற மக்களிடம் நிரம்ப இருப்பதைப் பார்க்கலாம். திடீர்ச் சாவுகளை இயக்கி, சுடலைமாடன், வாதை முதலிய கொடுந் தெய்வங்களுடைய கோபத்துடன் இணைத்துக் கூறுவது வழக்கம், இறந்தவர்களின் ஆவி சாவுக்குப் பின்னரும் ஆற்றலுடன் உலாவித் தீமைகளைச் செய்யும் என்ற எண்ணம் நாட்டுப்புற மக்களுக்கு உண்டு. அத்தகைய ஆவிகளை அமைதிப் படுத்துவதற்குப் படையல் செய்வது பழக்கம். பரங்கித் துரை செங்கிடாய்க் காரனைப் பணிந்து

அவன் வழியாகச் சிவனிடம் வரம்பெற்றுத் தெய்வமாகி விட்ட தாகக் கதைப்பாடல் கூறுகிறது. அச்சவுணர்வும் சிந்தனை முகிழ்ப்பற்ற தன்மையும் உடைய மக்கள் இத்தகைய கற்பனை உணர்வை நம்பிப் பரங்கித் துரையை ஒரு தெய்வமாக ஏற்று வணங்கி வந்ததாகக் கருதலாம். அத்தகைய பழைய நடைமுறைப் பழக்கத்தைப் பின்பற்றி இன்றும் அத்தெய்வ வணக்கம் நடந்து வருகிறது.

(3) பண்டைக் காலத்திலிருந்து தமிழ் மக்கள் கப்பல் வாணிபத்தில் சிறந்து விளங்கி உள்ளார்கள். உறுதியாகக் கப்பல் கட்டும் தொழில் தமிழ் நாட்டில் நன்கு நடைப்பெற்றிருக்க வேண்டும். ஆனால் இடைக்காலத்தில் தமிழ் நாட்டு அரசியல் சிதைவு காரணமாகவும் வேற்று நாட்டவரின் மேலாண்மையின் வலிமையாலும் அத்தொழில் சிதைவுற்றிருக்க வேண்டும். ஆயினும் இங்கு மரவேலை செய்வதில் திறமையுடைய தச்சர்கள் இருந்தனர். அதனை உணர்ந்த ஆங்கிலேய அதிகாரி இங்குள்ள மலைகளில் கப்பலுக்கு வேண்டிய மரங்களை வெட்டித் தமிழ் நாட்டிலுள்ள மரவேலைக் கலைஞர்களை இங்கிலாந்து நாட்டுக்கு அழைத்துச் சென்று அங்குள்ள டோவர் துறைமுகத்தில் கப்பலைக் கட்டி மீண்டும் தமிழ் நாட்டுக்கு வந்த செய்தி இக்கதைப் பாடலில் தெளிவாகத் தரப்பெற்றுள்ளது.

(4) கப்பல் செய்வதற்கு எந்த மரங்கள் உதவும்படியானவை என்ற செய்தியும் தரப்படுகின்றன. சந்தனம், ஆசனி, மஞ்சணத்தி, வண்டாளை, மாமருது, தேக்கு, கருநாங்கு, புன்னை, காரிலுப்பை, வெண்ணாங்கு ஆகிய மரங்களைத் தெரிந்து வெட்டு கிறார்கள். இவை அனைத்தும் பலம் மிக்க மரங்கள். தண்ணீரில் நனைந்தாலும் கெட்டுப் போகாதவை இரும்பு ஆணி கொண்டு இறுக்கமாகப் பொருத்துவதற்குத் தக்கவை. இவற்றை நன்கு அறிந்த கலைஞர்கள் இங்கிருந்த செய்தியை இந்தக் கதைப் பாடல் கூறுகிறது. எந்தெந்த மரங்கள் வேண்டாதவை என்ற செய்தியும் தரப்பெற்றுள்ளது.

(5) மரங்களை அறுத்துப் பலகைகள் ஆக்கிப் பின் இரும்பாணி கொண்டு இணைத்துக் கப்பல் கட்டிய முறை விரிவாகக் கூறப்பெற்றுள்ளது. வெள்ளைக்காரர் கூட்டமாக நின்று தமிழ் நாட்டு ஆசாரிகள் கப்பல் செய்ததைப் பார்த்த செய்தியும் உரைக்கப் படுகிறது. இவர்கள் கப்பல் கட்டும் முறை வேறுபாடு உடையதாக இருந்திருக்க வேண்டும் என்று கருதுவதற்கு இடம் உள்ளது.

(6) கப்பலில் பல்வேறு பொருட்கள் வைக்கத் தனித்தனி அறைகள் வைக்கப்பட்டதாகக் கதைப் பாடல் கூறுகிறது. பட்டுச் சேலை, பழம், தேங்காய், ஆடு, மாடு பன்றி, கோழி, யானை, பரி, மஞ்சள், சீரகம், கோதுமை, அரிசி, பாக்கு, புகையிலை முதலிய பல பொருட்கள் வாணிபத்துக்காகக் கொண்டு செல்லப் பட்ட செய்தியையும் இதன் வாயிலாக அறியலாம்.

(7) இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்குக் கப்பல் வழியாக வரும்போது முக்கியமாக எந்தெந்த இடங்களைக் கடந்து வர வேண்டும் என்ற செய்தியும் தரப்பெற்றுள்ளது. ஒரு நாட்டுப் புறக் கவிஞரின் பாடலாக இவற்றைப் படிக்கும் போது வியப் பாகவே உள்ளது.

கன்னியாகுமரிக்கு மேற்கே மணக்குடியில் கடலுடன் கலக்கும் பழையாற்றுக்குக் கிழக்கு இரண்டு பழைய நெடுங்கோட்டைகள் இருந்த தடங்களை இன்றும் காணலாம். கன்னியாகுமரிக்குச் சிறிது தொலைவில் மேற்கே இருக்கும் கோட்டை வரிசையாகத் தோன்றும். படை நிறுத்தும் தளங்கள் கற்கட்டுகளாக இடைவிட்டு இடைவிட்டு இன்றும் சிதைந்த நிலையில் கடலிலிருந்து மலை வரையிலும் உள்ளன. அதன் தலைமை இடத்தைச் 'சவரிக் கொத்தளம்' என்று கூறுவர்.

இந்தக் கோட்டைக்கு முந்தியதாக மணக்குடிக்குக் கீழ்ப் பகுதியில் அமைந்திருந்த கோட்டையைக் கருதுவர். இது கடலி லிருந்து மலைவரையிலும் மண்ணால் கட்டப்பட்டது. ஆகை யினால் இதனை 'மண்கோட்டை' என்றே மக்கள் இன்றும் குறிப்பிடுவர். அதன் பக்கம் எழுந்துள்ள ஓர் ஊருக்குக்

கோட்டையடி என்ற பெயர் இருப்பது குறிப்பிடத்தக்கது. முட்காடு இருந்த பகுதி சில இடத்தில் காணப்படுகிறது. மண் கோட்டை கடலில் இணைந்திருந்த இடத்தில் கல்லினால் ஒரு படையிருப்பு கட்டியுள்ளனர். அதன் அழிவுச் சின்னத்தை இன்றும் கடற்கரையில் காணலாம்.

வெள்ளைக்காரனின் கப்பல் இந்தக் கோட்டைப் பகுதியைக் கடந்து கடல் வழியாகக் கிழக்கே செல்வதைக் கதைப் பாடல் குறிப்பிட்டுக் கூறுகிறது.

> 'மணக்குடியும் பொழிமுகமும் வந்து கண்டார்
> [பரங்கித்துரை
> வஞ்சி மன்னர் இட்டதொரு மண்கோட்டை தானுங்
> [கண்டார் (418—419)

இந்த மண் கோட்டை யாரால், எப்பொழுது, எதற்காகக் கட்டப் பெற்றது என்று யாருக்கும் தெரியவில்லை. ஆனால் இந்தக் கதைப்பாடல் மண்கோட்டையை வஞ்சி மன்னர் கட்டியதாகக் கூறி ஓர் உண்மையைக் காண ஒளிவிளக்குக் காட்டுகிறது. திருவிதாங்கூர் சுதேச நாட்டின் அரசர்களையே வஞ்சி மன்னர் என்று கூறுவர்.

இதிலிருந்து ஒரு செய்தியை அறிய முடியும். இக்கோட்டையை வஞ்சி மன்னர் கட்டியதனால் இந்த மண்கோட்டைக்குக் கிழக்கி லுள்ள நிலப்பகுதி அவருக்கு உரிமை இல்லை என்பது மிகத் தெளிவு. அவ்வாறாயின் இன்றுள்ள கன்னியாகுமரிப் பகுதி முன்பு பாண்டிய மன்னருக்கு உரிமையுடையதாக இருந்துள்ளது. பிற்காலத்தில் மண் கோட்டைக்கும் சவரிக் கொத்தளத்துக்குக் கிழக்கில் இருக்கும் குமரி முனைப் பகுதி திருவிதாங்கூரைச் சேர்ந்திருக்கும். 1956ஆம் ஆண்டு வரை இப்பகுதி திருவிதாங் கூருக்கு (திருவிதாங்கூர்—கொச்சி) உரிமையாக இருந்து மொழி வாரி மாநிலப் பிரிவின் அடிப்படையில் தமிழ் நாட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது குமரி மாவட்டத்தில் காணப்படும்

வரலாற்றுச் சின்னங்களை ஆராய்ந்து பார்த்தால் இன்னும் பல உண்மைகள் உறுதியாகப் புலனாகும்.

கதைப்பாடலின் காலம்

வெள்ளைக்காரன் கதைப் பாடலை எப்பொழுது ஆசிரியர் பாடினார் என்ற குறிப்பைக் காப்புப் பாடலில் தருகிறார்.

'வழுத்துவோ மாயிரத்தி நூறாம் ஆண்டு
வரிசைபெறு வைகாசி இருபத் தொன்பான்
பழுதில்லாக் குருவாரம் (பஞ்சமி) ஓணநாளில்
பரங்கித்துரை கதையை நான்தனுசிற் பாட
தொழுதென்றன் குருநாதர் பாதம் போற்றிச்
சொல்லுகிறேன் இக்கதையைப் பெரியோர் [கேட்க
மழுவேந்தி யும்மகனும் அயனும் மாலும்
வந்திந்த கதைக்குதவ வேண்டும் தானே'

இந்தப் பாடலிலிருந்து இக்கதைப்பாடலைப் பாடி முடித்த நாள் கொல்லம் 1100 ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் 29ஆம் நாள் வியாழக்கிழமை பஞ்சமி கூடிய திருவோணத்தன்று என்பது தெளிவு. இது கிறித்தவ ஆண்டு 1925 ஜூன் திங்கள் 11ஆம் நாளுக்குச் சரியாகும். இதைப் பாடிய புலவரான முத்தையா வாத்தியார் அண்மைக் காலத்தவர். ஆனால் கதையும் வெள்ளைக்காரன் வணக்கமும் முந்தியவை. இக்கதைப் பாடல் வாய்மொழியாகப் பாடப் பெற்று வந்துள்ளது.

இந்தப் பாடலில் பரங்கித்துரையின் கப்பல் மத்தியதரைக் கடல் வழியாகச் சூயஸ் கால்வாயைக் கடந்து செங்கடலுக்கு வந்ததாகக் கூறப்படுகிறது சூயஸ்கால்வாய் 25—4—1859 இல் வெட்டத் தொடங்கப் பட்டதாகவும் 9—11—1869 இல் வெட்டி முடிக்கப் பட்டதாகவும் வரலாறு கூறுகிறது. ஆகையினால் பரங்கித் துரையின் கப்பல் இந்தியாவுக்கு வந்தது 1869 ஆம் ஆண்டுக்குப் பின்னரே என்பது உறுதி ஆகிறது.

கதைப்பாடல் 'பாம்பே' துறைமுகத்தை 'மாம்பேன்' என்று கூறுவது சிந்தனைக்கு உரியது. ஆங்கில ஆட்சி வலிமையடையும் வரை இந்த இடம் 'மாம்பே' என்றே பரவலாக அறியப்பட்டுள்ளது. அந்தக் காலத்தில்தான் இக்கதை நிகழ்ச்சி நடந்திருக்க வேண்டும். மேலும் கோழிக்கோடு நகரம் போர்த்துக்கீசியரால் 'காலிகட்' என்று அழைக்கப்பட்டு அப்பெயர் அனைவராலும் பேசப்பட்ட காலத்தில் இது நடந்துள்ளது. இவற்றைக் கொண்டு பார்த்தால் வெள்ளைக்காரன் கதை 1869 ஆண்டுக்குப் பின் 1900 ஆண்டுக்கு முன் நடந்ததாகத் தோன்றுகிறது. இவற்றைக் கொண்டு இந்தக் கதைப்பாடல் நிகழ்ச்சியின் காலத்தைப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி என்று கூறலாம். அப்பொழுது நடந்த நிகழ்ச்சி மக்களால் கொண்டாடப்பட்டு வந்துள்ளது. அதை முத்தையா வாத்தியார் 1925ஆம் ஆண்டு பாடலாக எழுதிச் சுவடி உருவில் நமக்குத் தந்துள்ளார்

கதைப்பாடல் ஆசிரியர்

வெள்ளைக்காரன் கதைப்பாடல் ஆசிரியர் தன்னைப் பற்றிய குறிப்பைப் பாடலில் ஒரு இடத்தில் மிகச் சுருக்கமாகத் தந்துள்ளார்.

'பூமகளி னருளாலே பூவியூர்ப் பதிவளரும்
புகழுடைய சிவனணைஞ்ச பெருமாள் நாடார்
[தம்புதல்வன்
முத்தமிழை அறியாதான் முன்னோர்கள் சொற்படியே
மும்மாலை தினம்வணங்கும் முத்தையா நாடாரவர்
பார்வதியாள் பாலனையும் பலகால மேதுதித்து
பரங்கித் துரைகதையைப் பாடிவைத்தேன்
[அன்போடே' (5—10)

'முன்னோர்கள் சொற்படியே—பரங்கித் துரை கதையைப் பாடி வைத்தேன்' என்பதை இணைத்துப் பார்த்தால் இக்கதை ஆசிரியரின் காலத்துக்கு முன்பே வாய்மொழியாகப் பலரால் பாடப்பட்டு வந்துள்ளமை விளங்கும். ஆசிரியர் கன்னியாகுமரிக்கு மேற்கே சுமார் மூன்று கல் தொலைவிலிருக்கும் பூவியூர் என்ற சிற்றூரைச் சேர்ந்தவர். இவர் 1886 ஆம் ஆண்டு பிறந்து 82

ஆண்டுகள் வாழ்ந்து 1968 ஆம் ஆண்டு தன் உலக வாழ்வை நீத்தார்.

பூவியூரில் இவரை முத்தையா வாத்தியார் என்றும் முத்தையா சோஸியர் என்றும் மக்கள் அன்புடன் அழைப்பர். இவர் பல கதைகள், காவியங்களைப் படித்ததுடன் சோதிடக் கலையையும் நன்கு அறிந்தவர். மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தாலும் சிறு வயது முதல் தெய்வ பக்தி மிக்கவராய் இருந்துள்ளார். இறைச் செய்திகளை அறிவதிலும் தெய்வக் கதைகளைப் படிப்பதிலும் ஆர்வம் மிகுதியாகக் காட்டியுள்ளார். அதோடு சிறிதளவு இசை யறிவும் இருந்ததாக அறியமுடிகிறது.

ஊர்ப் பெரியவர்களான பெருமாள், துரைசாமி நாடார், சிவன் அணைந்த பெருமாள் நாடார், சிதம்பரநாதன் நாடார் போன்றவர் கள் இவரை நன்கு ஆதரித்து ஊக்கமூட்டியுள்ளனர். சிற்றூரில் பள்ளிக்கூடம் இல்லாத குறையைப் போக்க ஒரு திண்ணைப் பள்ளிக்கூடம் தொடங்கி இவரை அதில் ஆசிரியராகப் (அண்ணாவி என்றும் வாத்தியார் என்றும்அழைத்துள்ளனர்) பணியாற்ற அமர்த்தியுள்ளனர். மாணவர்களின் தகுதிக்குத் தக்கவாறு பழங் கதைகள், பழைய முறைக் கணக்கு, சோதிடம் முதலியவற்றைச் சொல்லிக் கொடுத்திருக்கிறார்.

அவருடைய மாணவ மாணவிகளாகப் பூவியூரிலும் பக்கத்து ஊர்களிலும் பலர் இருக்கின்றார்கள். அவர்களில் சிலர் திறமையாக வில்லில் பாடுகிறார்கள். ஒன்றிரண்டு பேர் சோதிடக் கலையில் திறமையுற்று விளங்குகிறார்கள். ஆசிரியர் முத்தையா வாத்தியார் வாழ்க்கையில் வறுமையை நன்கு அனுபவித்தவர். ஊர்ப் பெரிய வர்களுடைய ஆதரவால் ஓரளவு வாழ்வைக் கலங்காமல் கழித் துள்ளார்.

முத்தைய வாத்தியாரின் தோற்றம் மிகவும் எளிமையானது. மேல் சட்டை அணிந்த நிலையில் அவரை யாரும் பார்த்திருக்க முடியாது. ஏழ்மை நிலையைப் பொருட்படுத்தாது நாட்டுப் புற இலக்கியத்தை வளர்த்தவர் என்று கூறலாம். பேசிக் கொண்டிருக்கும்போதே கவிதைகள் புனைந்து பாடும் திறமையுடையவர். பல கதை அமைப்புடைய பாடல்களைச் சுவடியுருவில் பாடி வைத்திருந்தார். முயன்றால் அவை கிடைக்கலாம். வெள்ளைக்காரன் கதைப்பாடல் வாயிலாக அறியத் தக்கச் சில உண்மைகளைத் தந்து தமிழ் இலக்கிய வானில் முத்தையா வாத்தியார் ஓர் இடத்தைப் பிடித்து வாழ்கிறார்.

வெள்ளைக்காரன் கதை

காப்பு

1. சீரான லண்டன் மா நகரம் தன்னில்
சிறப்புடனே பரங்கித்துரை இருக்கும் அந்நாள்
பாராளும் அரசருமே மலையிற் சென்று
பாங்குடனே மரங்கள் வெட்டிக் கப்பல்செய்து
பேரான சமுத்திரங்கள் தீவும் கண்டு
பெருமையுடன் வரும்போது செங்கிடாய்க்காரன்
வாரானைத் தவிட்டுதுறை தன்னில் வைத்து
வதைத்தகதை நீணிலத்தில் வாழ்த்துவோமே.

2. வழுத்துவோ மாயிரத்து நூறாம் ஆண்டு
வரிசைபெறு வைகாசி இருபத் தொன்றில்
பழுதில்லாக் குருவாரம் பஞ்சமி (ஓண) நாளில்
பரங்கித்துரை கதையை நான் தனுசிற் பாட

காப்பு : 1

பரங்கித்துரை—வெள்ளைக் காரக் கனவான்
செங்கிடாய்க்காரன்—ஒரு நாட்டுப்புறத் தெய்வம்
வாராளி—நீரால் நிரம்பிய கடல்
வதைத்த—கொன்ற

காப்பு : 2

வரிசைபெறு—சிறப்புப் பொருந்திய
பழுதில்லா—குற்றமற்ற
தனுசில்—வில்லில்

தொழுதென்றன் குருநாதர் பாதம் போற்றிச்
சொல்லுகிறேன் இக்கதையைப் பெரியோர் கேட்க
மழுவேந்தி யும்மகனும் அயனும் மாலும்
வந்திந்தக் கதைக்குதவ வேண்டும் தானே

பாட்டு

நாடான நாட திலே நல்ல லண்டன் பட்டினத்தில்
தேசமான தேசத்திலே சிறந்தலண்டன் பட்டினத்தில்
பாரடக்கி அரசாண்ட பரங்கித்துரை தன்கதையைப்
பாடுகிறோம் இச்சபையில் கமல பதம்போற்றி

பூமகளினருளாலே பூவியூர்ப் பதிவளரும்
புகழுடைய சிவனணைஞ்ச பெருமாள் நாடார் தம்
புதல்வன்
முத்தமிழை அறியாதான் முன்னோர்கள் சொற்படியே
மும்மாலை தினம்வணங்கும் முத்தையா நாடாரவர்
பார்வதியாள் பாலனையும் பலகால மேதுதித்து

பரங்கித் துரைகதையைப் பாடிவைத்தேன் அன்போடே
சின்ன துரையுடனே சிறந்த குசினிக்காரர்களும்

மழு—கோடரி
அயனும்—நான் முகனும்
மாலும்—திருமாலும்
3. பாரடக்கி—உலகத்தைத் தனக்குக் கீழடக்கி (அரசாண்ட)
4. கமலம்—தாமரை
5. பூமகள்—நிலமகள் (கலைமகளையும், திருமகளையும் குறிக்கும்)
8. மும்மாலை—மூன்று பொழுது (காலை, மாலை, பகல்)
9. பார்வதியாள் பாலன்—விநாயகப் பெருமான்
11. குசினிக்காரன்—சமையல்காரன்

சிந்தை மெய்க்கமனமகிழ்ந்து சிறந்தநல்ல காலாளும்
துப்பாக்கி செய்யுகின்ற துரை வெள்ளைக் காரர்களும்
துரிதமுடன் பீரங்கி செய்யும்வெள்ளைக் காரர்களும்

வெள்ளைக்காரர் பாளையமும் மிக்கபடைத்தலைவருடன்
வேண்டும் வண்ணம் படைகரியும் வேந்தர்களும்
[புடைசூழ
அடக்கிஅர சாண்டிருந்தார் ஆணழகன் பரங்கித்துரை
ஆதிபரன் அருளாலே ஆண்டிருக்கும் நாளையிலே
பூவுலகி லரசர்கட்குப் புகழும் கப்பல் இருப்பதினால்

நாட்டமுடன் என்றனக்கு நல்லகப்பல் செய்யவேணும்
என்றுமன்னன் சந்தோஷமா யிருக்கின்ற வேளையிலே
ஏற்றசின்ன துரையோடே ஈதுசொல்வார் பரங்கித்துரை
செப்பமுள்ள பரங்கிதுரை சிறந்தகப்பல் முகிக்கவென்று
ஒப்பமுள்ள மாந்தையரை உறுதியுடன் வரவழைத்தார்

அப்போது மாந்தையர்கள் அன்புடனே வந்துநின்று
கைகட்டி வாய்புதைத்து காவலனோ டதுரைப்பார்
எங்களையும் அழைத்தசேதி ஏதுவகை சொல்லு
[மென்றார்

---

12. மெய்க்க—மெச்ச, பாராட்ட
15. பாளையம்—படையிருப்பு
16. படைகரி—போர் யானை
18. ஆதிபரன்—இறைவன், பரமசிவன்
23. முகிக்க—முடிக்க (முகித்தல்—முற்றச்செய்தல்)
24. ஒப்பம்—தகுதி, சிறப்பு
25. மாந்தையர்—தச்சர், மரவேலை செய்வோர்
26. வாய்புதைத்து—வாயைப் பொத்தி
27. சேதி—செய்தி

சொல்லுமென்று மாந்தையர்கள் துரிதமுடன் கேட்ட
[போது
செப்பமுள்ள பரங்கிதுரை சொல்லுவாராம் சந்தோசமாய்

கப்பல்செய்ய மரமதுதான் கருத்தாக வெட்டவேணும்
ஆனதினால் உங்களையும் அழைத்தேன் நான்
[சீக்கிரத்தில்
திட்டமுடன் மலைதனிலே சிறந்தமரம் வெட்டவேணும்
அந்தஉரை யினைகேட்டு அடிதொழுது மாந்தையர்கள்
என்னஎன்ன மரமதுதான் ஏற்றகப்பலுக் காகுமென்றார்

அந்தவுரை தனைக்கேட்டு அழகுடைய பரங்கித்துரை
சிந்தைமெய்க்க மனமகிந்து சிறந்தவெள்ளைக் காரர்களும்
ஆனைபடை காலாளும் அடர்ந்தபடை தன்னோடே
சேனைமன்னர் தம்மோட சிறந்தநல்ல பரங்கித்துரை
வெள்ளைக்காரர் மாந்தையரும் விரைவுடனே தானும்
[சென்று

மந்திரியும் மாந்தையரும் வாய்த்தகுசினிக் காரர்களும்
பரங்கித்துரை தன்னோடே பணிந்துநின்று கேட்டபோது
தாழ்ந்தவர்கள் கேட்டபோது தானுரைப்பார் சந்தோச
[மாய்
மாந்தையரே மந்திரியே மற்றும்பிர தானிகளே
சீக்கிரத்தில் என்றனுக்கு சிறந்தகப்பல் முகிக்கவேணும்

---

29. செப்பம்—இணக்கம், செம்மை
31. சீக்கிரத்தில்—விரைவாய்
43. பிரதானிகள்—முக்கிய மனிதர், அதிகாரிகள்

கப்பலினால் வரும்வினையைக் காவலவன் அறியாமல்
சார்வான காக்காச்சி சந்தனவாள் மலைநோக்கி
சிறந்தமரம் வெட்டப் போவோம் என்றாரே.

வேறு

சொன்ன போதந்த மாந்தையர்சேரவே
சடிதியாகப் படைகளும் கூட்டினார்
காலாளும் பெருப்படை
சேரவே கனத்த நல்லபுரவியும் ஒட்டகம்

ஏனையோடு புரவிகள் கூட்டமும்
ஏற்றநல்ல துரைமாரும் சேரவே
மாந்தையர் கொத்த மார்களும்சேரவே
வரிசையாகவே வண்டிகள் சேர்த்தனர்
சேர்த்துவண்டிக் கிடாக்களைப்பூட்டியே சிறந்த
மாந்தையர் கொத்தமார் கூடியே
கூடியே லண்டன் பட்டணம் விட்டவர்
கூண்டமாமலை தன்னையும் நோக்கினார்
ஏலம்சீரகம் இஞ்சி விளைமலை,
ஈயம் செம்புரசம் விளையும் மலை

கண்டுமாமலை தன்னையும் விட்டவர்
கால்நடையாய் நடந்தவர் வாராறே
வன்ன கிரிமலை வடமேற்குப்பருவதம்
வனமானதோர் சோலை கடந்துதான்

---

48. சடிதி—விரைவு
49. புரவி—குதிரை
50. ஏனை—யானை (வழக்கு முறை)
51. கொத்தமார்—வேலை செய்பவர்
52. கிடாக்கள்—எருதுகள்

சக்தி முனியுடன் தவத்தியர் வாழ்மலை
சார்வான காக்காச்சி சந்தனம் வாழ்மலை
கொந்து கொந்தாய் மலைகள்மீ தேறியே
கூண்ட கப்பலுக்கு மரங்கள் தேடுவாராமே.

வேறு

பாடலுடன் ஆடலுமாய் பரங்கித்துரை பாளையங்கள்
பாரமலை மீதில் ஏறுவாராம்
60. மாந்தையரும் கொத்தன்மாரும் வாய்த்தமலை
தன்னிலேறி வரிசையுடனே மரங்கள் பார்த்தார்
பார்த்துநின்று சந்தோசமாய் படர்ந்தமலைச்
சோலையிலே பரங்கித்துரை யானவரும் சொல்வார்
தேடரிய சந்தனமும் திடமான ஆசனியும்
தெரிந்தார் கப்பற் காகுமென்று சொல்லி
வாட்டமில்லா மாமருது வண்டாளை குருந்திநெல்லி
வல்லிபூரம் கொல்லியு மாகாது

---

59. கொந்து கொந்துமாய்—அங்குமிங்கும் நெருக்கமாய் (கொத்துக் கொத்தாய்)

62. சந்தனம், ஆசினி } மரப்பெயர்கள் (கப்பல் கட்ட ஏற்றவை)

63. மருது, வண்டாளை, குருந்தி, நெல்லி, வல்லிபூரம், கொல்லி } மரப்பெயர்கள் (கப்பல் கட்டக் கூடாத மரங்கள்)

ஆல் அரசு பூவரசு ஆளி புளி தேளுவை
ஆணிஞ்சி குருவிஞ்சியு மாகாது

65. ஆத்தி இத்தி ஆலரசு அடுக்கடுக் காய்நெல்லி
ஆத்திதிரு வாத்தியுமாகாது

வெத்திகருங்காலிநல்ல வில்லைபூரம் கொல்லி குமிழ்
வேங்கைகரு வேங்கையுமாகாது

தேடிவந்த மாந்தையர்கள் சிறந்த பரங்கித்துரையும்
சிறந்தமரம் பார்த்துவெட்ட வேணும்

வெட்டுமரம் மஞ்சணத்தி வண்டாளை மாமருது
மலைதனிலே நல்லமரம் பார்த்து
தேக்கோடு சந்தனமும் சிறந்தகரு நாங்குடனே
சிறந்த வெள்ளைக்காரரவர் கூடி

---

64. ஆல்
அரசு
பூவரசு
ஆளி
புளி
தேளுளுவை
ஆணிஞ்சி
குருவிஞ்சி
} மரப்பெயர்கள் (கப்பல் கட்டக் கூடாத மரங்கள்)

65. ஆத்தி
இத்தி
திருவாத்தி
} மரப்பெயர்கள் (கப்பல் கட்டக் கூடாத மரங்கள்

66. வெத்தி
கருங்காலி
வில்லை—வில்வம்
பூரம்
குமிழ் வேங்கை
கரு வேங்கை
} மரப்பெயர்கள் (கப்பலுக்கு ஆகாத மரங்கள்)

68. மஞ்சணத்தி
மாமருது
69. தேக்கு
சந்தனம்
கருநாங்கு
} கப்பல் கட்ட உதவும் மரங்கள்

70. புன்னையொடு காரிலுப்பை புகழ்பெரிய வெண்ணாங்கும்
புகழ்ந்து மரம் தன்னை வெட்டுவாராம்
வெட்டியவர் சந்தோசமாய் வீறுடைய படைத்தலைவர்
மிக்கவண்டி தன்னில் ஏற்றுவாராம்
ஏற்றியவர் வண்டியிலே கிடாக்களையும் பூட்டிக்கொண்டு
இறங்குவார் மலைவாரத்தை விட்டு

செப்பமுள்ள காக்காச்சி சிறந்தமலைக் காவும் விட்டு
சின்னதுரை யானவரும் வரவே
மாந்தையரும் கொத்தன்மாரும் வண்டியது தானடிக்க
வருதல்லோ மாமலையை விட்டு

75. கட்டுடைய பரங்கித்துரை காலாளும் பெரும்படையும்
கருத்துடன் லண்டன் பட்டணத்தில் வந்தாரே

விருத்தம்

வந்தனன் பரங்கிதுரை மன்ன னவன்படையும் சேர
சிந்தையாய் மனதுமெய்க்கும் சிறப்புடன் ஒருபோல் நீங்கள்
விந்தையா சாரி மாரை விரைவுடன் வர வழைத்து
இந்தநேரமே கப்பல் நீர் இதமுடன் செய்யுமென்றார்

வேறு

செய்யுமென்று பரங்கித்துரை சின்னதுரை சொல்கேட்டு
சிறப்புடனே ஆசாரி மார்கள்
ஆசாரிமார் வெள்ளைக்காரர் அடங்கலும் மிகக்கூடி
அளந்து பெருக்குவார் மரத்தை

---

70. புன்னை, காரிலுப்பை, வெண்ணாங்கு } கப்பல் கட்ட உதவும் மரங்கள்

72. மலைவாரம்—மலையிடங்கள்

விருத்தம். வரி-3
விந்தையாசாரிமார்—வினோத வேலை செய்யும் தச்சர்கள்

77. அடங்கல்—நெருங்கியுள்ள கூட்டம்

பெருக்கி அந்த மரமதையும் வாளாலறுத்தவர்கள்
பெருமையுட னேபலகை சேர்த்தார்
நாங்குமர மானதையும் நன்றாகப் பணிகள்செய்து
நல்லதொரு உத்திரங்கள் சேர்த்தார்

80. பொறுப்புடைய உத்திரங்கள் அருகாகப் பலகைசேர்த்து
பொருந்த விரும்பாணி வைத்திருக்கினார்
தோதகத்தி தேக்கையும் சுருதியுட னேயறுத்து
தூர்ப்பலகை யாகச் சேர்த்திருக்கினார்
இறுக்கினார் தூர்ப்பலகை இருப்பாணி கொண்டுவந்து
இசைந்த திருகாணி வைத்திருக்கினார்

இறுக்கினார் கப்பலுக்கு இருகரையும் வெட்டுவாள்
இன்பமுடனே பணிகள் செய்தனர்
தீர்க்கமுடன் கப்பலுக்குக் கீழ்த்தட்டு தான்முடித்து
திறமுடைய பரங்கித்துரை சொல்லுவார்

85. பெரியதுரை சின்னத்துரை பேரழகன் குசினிக்காரன்
பெருமையுடன் கப்பல்மூகிக்க வேணுமென்றாரே

வேறு

என்ற வார்த்தை கேட்டபோது எழுந்திருந்து மாந்தை
யர்கள்
எடுத்தனரே வாச்சியுளி எல்லோரும் ஒருபோல

---

79. பணிகள்—வேலைகள்
81. தோதகத்தி—கருங்காலி மரம் அல்லது ஈட்டி மரம்
(ஒரே மரத்தின் மூன்று பெயர்கள்)
தூர்ப்பலகை—அடிப்பாகத்துப் பலகை
82. இசைந்த—பொருத்தமான
திருகாணி—சுற்றிச்சுற்றி இறுக்கும் புரியுள்ள ஆணி
(ஸ்குரு ஆணி)
83. வெட்டுவாள்—இருப்பை வெட்டும் உளி
84. தீர்க்கம்—உறுதி
87. வாச்சி, உளி } மரவேலைக்கு உரிய வெட்டுக்கருவிகள்

பட்டுச்சேலை வைப்பதற்குப் பாங்குடனோர் அறையும் வைத்தார்
பழம்தேங்காய் பலவும் வைக்கப்பாவினையாய் அறையும் வைத்தார்
ஆடு மாடு கோழி பன்றி அடைக்க ஓர் அறையும் வைத்தார்
அரவணிந்தோனருளாலே அமைத்தாரே பல வறைகள்
சேர்த்தனரே அறைகள்எல்லாம் சிறந்ததுரை மன மகிழ்ந்து

செய்தனரே பணம்காசு வைக்கஒரு அறையும் வைத்தார்
ஆனைபரி யேற்றுதற்கு அறைகள் வைத்தார் சந்தோமாய்
அடுக்கடுக்காய் அறைகள்வைத்து அழுத்தினார் கப்பலிலே
மஞ்சளோடு சீரகமும் வைக்கஒரு அறையும் வைத்தார்
மாந்தையர்கள் கடலைவைக்க வைத்தனரே பல அறைகள்

கோதுமை அரிசிவைக்க கூடஒரு அறையும் வைத்தார்
கூண்டவெள்ளைக் காரரவர் கொலுவிருக்க அறையும் வைத்தார்
பாக்குடனே புகையிலையும் பலசரக்கு ஏற்றுதற்கு
பண்பாகக் கப்பலிலே பல அறைகள் வைத்தனரே
காப்பிக்கொட்டை வைப்பதற்குக் கப்பலில்ஓர் அறையும் வைத்தார்

---

89. பாவினையாய்—அழகாய் (பேச்சு வழக்கு)
91. அரவணிந்தோன்—பாம்பை அணிந்த சிவ பெருமான்
99. கொலுவிருக்க—அதிகார நிலையில் ஆடம்பரமாய் இருக்க

கன்னல் செந்நெல் வைப்பதற்குக் கருத்துடனே அறைகள்
பெருமையுட னேழுதட்டாய் பெரியகப்பல் செய்தனரே
புகழ்பெறவே பரங்கித்துரை பிரியமுடன் மனமகிழ
மனம்மகிழ நங்கூரங்கள் வைத்தனரே கப்பலிலே
மாந்தையரும் கொலுவாக வைத்தனரே பல அறைகள்

அறைகள்வைத்தார் சந்தோசமாய் ஆணழகன் கப்பலிலே
அரியஉத்திரம் கதவு அழகுபெற வைத்தனரே.
திருத்தமுடன் கப்பலுக்குச் சுக்கானை வைத்திருக்கிச்
சீர்பெறக் கப்பல் தன்னைத் திறமுடன் முடித்தாரன்றே

விருத்தம்

வைத்தனர் ஆசாரிமார்கள் வருந்தியே துரை இடத்தில்
பொருத்தமாய்க் கப்பல்செய்து புகழ்பெற வைத்தோம் நாங்கள்
திருத்தமாய்க் கப்பலில்தன்னில் திருக்கொடி மரங்கள் இல்லை
கருத்துடன் மரங்கள் வெட்டிக் கடுகவே வாருமென்றாரே

வேறு

என்றவுரை தனைக்கேட்டு ஏதுசொல்வார் பரங்கித்துரை

கொடிமரத்துக் கெங்குபோவோம் கொத்தன்மாரை வருத்து மென்றார்
அந்தவுரை யினைக்கேட்ட அழகுடைய சின்னத்துரை
வாருமடா குசினிக்காரா வருத்துமடா மாந்தையரை
மாந்தையர்கள் இடமதிலே வந்துரைத்தார் குசினிக்காரர்
ஓட்டமும் நடையுமாக ஓடிவந்தார் மாந்தையர்கள்

---

103. கன்னல்—கரும்பு
104. ஏழுதட்டு—ஏழு மாடிகள்
106. நங்கூரம்—கப்பலைத் தரையுடன் பிணிக்கும் கருவி
110. சுக்கான்—கப்பலை திருப்ப உதவும் கருவி

வந்துநின்ற மாந்தையர்கள் மன்னவனை அடிதொழுது
எங்களையும் அழைத்தசெய்தி ஏதுவகை சொல்லுமென்றார்
சொல்லுமென்று மாந்தையர்கள் துரிதமுடன் கேட்டபோது
கப்பலுக்குக் கொடிமரந்தான் காவலோனே இல்லையென்றார்
சீக்கிரத்தில் மரங்கள்வெட்ட திடமுடனே போகவேணும்
போகவென்று பரங்கித்துரை புறப்பட்டார் சீக்கிரத்தில்
சின்னத்துரை மாந்தையரும் சிறந்த குசினிக்காரர்களும்
காவலாளும் பெரும்படையும் கனத்த நல்ல சேவுகரும்
கோடாலி வாச்சிஉளி கூண்டமுழக் கோலுடனே
எடுத்தவர்கள் ஒருப்போல எல்லாரும் வழி நடந்தார்
எந்தஎந்த மலைதனிலே இனிப்போவோம் மரங்கள் வெட்ட
இஞ்சிபிஞ்சி காய்க்குமலை இருவாச்சி பூக்குமலை
அச்சங்காவு மலையுடனே ஆரியங்காவு சோலையிலும்
சக்திமா முனியுடனே தவத்தியர்கள் வாழ்மலையும்
வண்ணநெல்லி விளையுமலை வளருகின்ற கொல்லி மலை

---

122. சீக்கிரம்—துரிதம்
125. சேவுகர்—சேவகர்
126. கோடாலி—கோடரி (பேச்சு வழக்கு)
127. ஒருப்போலே—ஒன்றாய்க் கூடி
129. இருவாச்சி—மணமிக்க ஒரு மலர்க்கொடி

மாலயனும் ஆதித்தனும் வந்துசந்திரன் உறையும்மலை
செப்பமுள்ள கொடிமரத்தைத் தேடுவராம் மலைதோறும்
ஒப்பமுள்ள கொடிமரந்தான் ஒருஇடந்தான் காணாமல்
காணாமல் தடுமாறி காவலனும் துரைமாரும்
எந்தவெந்த மலைதனிலே ஏற்றமரம் வெட்டிடலாம்
காக்காச்சி மலைதனிலே கழுகன்திட்டுப் பாறையிலே
திட்டவெட்டப் பாறையிலே சென்றவர்கள் வரும்போது

வரும்போது பரங்கிதுரை மகாதேவர் திருவருளால்
சிவனுடைய கைலையிலே திருவேள்வி தனிற்பிறந்த
வேள்வியிலே பிறந்துவந்த வீரன்செங் கிடாய்க்காரன்
வரம்வாங்கி செங்கிடாய்க்காரன் வந்துறைந்த கொடி
மரந்தான்
ஒத்துநேராய் வளர்ந்தமரம் உயர்ந்தகொடி மரமுட்டில்

சந்தன் மரமெனவே தானுறைந்தான் செங்கிடாய்காரான்
அந்தமர மானத்தையும் அழகுடைய பரங்கித்துரை
கண்டுமன்னன் சந்தோஷமாய் காலாள் களைவருத்தி
இந்தமரம் போலவேதான் இவ்வுலகிற் கண்டதில்லை
கப்பற்கேற்ற கொடிமரந்தான் கருத்துடன் வெட்டு
மென்றாரே

வேறு

வெட்டு மென்று பரங்கித் துரையவர்
விரைவாய் மாந்தையர் தம்மிடம் சொல்லவே
சொன்ன வாத்தையை மாந்தையர் கேட்டுமே
துரித மாக மழுக்கொண்டு வெட்டினார்

---

133. மாலயனும்—திருமாலும் நான்முகனும்
ஆதித்தன்—சூரியன்
135. ஒப்பமுள்ள—நேராக வளர்ந்துள்ள, ஒழுங்கான
143. உறைந்த—தங்கியிருந்த

வெட்ட வேமரம் உதிரமாய்ச் சாயவே
விதி வருவ தறியாமல் வெட்டினார்

விழுந்த தேமரம் லெக்ஷணம் கொண்டுதான்
விரைவாய் மாந்தையர் சந்தோசமாயினார்
தட்டியே கணு வெட்டிச் செதுக்கியே
தானவே முழக்கோலால் அளப்பாராம
எண்பது முழம் தனையும் அளந்துதான்
ஏற்றி னார்வண்டி மேல்கொடி மரத்தையும்
வண்டி மேல்கொடி மரத்தையும் ஏற்றவே
வம்பன் கருவலம் காத்த பெருமாளும்
செப்பு மந்தக் கொடிமரம் தன்னிலே
தீரன் பொன்காத்த பெருமாளும் உறைந்தனன்

பையப் பைய நகர்த்தி மலைவிட்டு
பரபரன்ன வழிகள் நடந்துதான்
செப்பமான பரங்கித்துரையவர்
சிறந்த லண்டன் பட்டினத்தில் வந்தாரே

வேறு

கொடி மரத்தைக் கொண்டுவந்து கொத்தன்மார்கள் தாம்பார்த்து
செப்பமுள்ள கொடிமரத்தைச் சிறக்கும்படி வேலை செய்து
ஒப்பமுடன் மாந்தையர்கள் ஒன்றுபோலே தாங்கூடி

---

153. உதிரம்—இரத்தம், குருதி
158. கருவலம் காத்த பெருமாள்—செங்கிடாய்க்காரன்
159. பொன் காத்த பெருமாள்—செங்கிடாய்க்காரன்

கூடியந்தக் கொடிமரத்தைக் கப்பலிலே தானிறுத்தி
ஒழுக்கறையால் சங்கிலியை உற்றகொடி மரத்திலிட்டு
மரத்திலிட்டு எஞ்சின்வைத்து வாய்ந்தகப்பல் தனில் சேர்த்தார்
புகைபாய்குழ லாயிரம் வைத்தார் புகழ்பெரிய கப்பலிலே
பாவுமரம் சிறுதோணி பவுசையுட னேமுடித்து

இருகரையும் வாள்நிறுத்தி ஏற்றகப்பல் தான்முடித்தார்
முடித்துக்கரை ஏறுமுன்னே முடுக்கன் செங்கிடாய்க் காரன்
ஆரொருவ ரறியாமல் அங்குநிற்கும் வேளையிலே
திட்டமுள்ள பரங்கித்துரை சின்னத்துரை வெள்ளைக் காரன்
டோவர் ஜலசந்தி துறைமுகத்தில் உற்றகப்பலை நிறுத்தினாரே

வேறு

நிறுத்தியந்தக் கப்பலையும் நீரோட்டம் பார்க்கவென்று
நேசமுடன் பரங்கித்துரை சொல்வார்
சொன்னபோது சின்னத்துரை சீக்கிரத்தி லேமகிழ்ந்து
சுக்கானைத் தான் திருப்புவாராம்
திருப்பிடவே கப்பலது டோவர்ஜல சந்திவிட்டு
திடுதிடென ஓடியது வரவே

---

166. ஒழுக்கறை—எஃகு
167. எஞ்சின்—கப்பலுக்குள்ள இயந்திரப் பொறி (Engine)
169. பவுசை—சிறப்பு
171. முடுக்கன்—வீரன், மிடுக்கன்
174. டோவர்—இங்கிலாந்தின் ஓரிடம்
ஜலசந்தி—இருகடல் இணையுமிடம்

ஓடியந்தக் கப்பலது இங்கிலீஷு சானல்விட்டு
உற்றநல்ல பிரஸ்றது நகர்கண்டார்
கண்டுஅந்த பரங்கித்துரை காவலவன் மனமகிழ்ந்து
கண்ணாடி வைத்தவரும் பார்த்தார்

180. பிரஸ்றது நகர் பெல்லித்தீவு பின்பெறவே தான்கடந்து
பிஸ்கே குடாதன்னை நோக்குவாராம்
ஆட்டுக்கால் முனையும்விட்டு அடுத்தகோயின் பாருநகர்
அழகுடைய துரைமார்கள் கண்டார்
கோயின்பாரு நகரம்விட்டு லிஸ்பன் நகரம்தன்னை
குணமுடைய துரைமார்கள் கண்டார்
கண்டவர்கள் ரக்காமுனை கடலில் அவர் வரும்போது
காவலன் செங்கிடாய் காரன்
கொடிமரத்தில் அவரிருக்கக் கொம்பனையாள் காவற்காரி
கோட்டிசெய்ய ரக்காமுனை விட்டார்.

185. சென்ட் வின்சென்ட்டுமுனை சீக்கிரத்தில் தான்கடந்து
செங்கிடாய் காரனவன் வரவே
வந்திடவே கப்பலது பலமுனைகள் தான்கடந்து
வாரியிலே கப்பல்வரும் நேரம்

---

178. இங்கிலீஷ் சானல்—இங்கிலாந்துக்கும் பிரஞ்சுநாட்டுக்கும் இடையிலுள்ள கடல் (English Channel
பிரஸ்றது நகர்—பிரஞ்சு நாட்டிலுள்ள ஒருநகரம்
179. கண்ணாடி—தொலைநோக்குக் கண்ணாடி (Telescope)
180. பிஸ்கே குடா—பிரஞ்சு நாட்டிலுள்ள ஒரு வளைந்த கடல் (Bay of Biscay)
181. ஆட்டுக்கால் முனை—(Cape of Ortegal)
184. கோட்டி செய்ய—எள்ளி நகையாட (பரிகாசம் செய்ய)
186. வாரி—கடல்

பரங்கித்துரை யானவரும் பாவினையாய் வீற்றிருக்க
பரனருளால் கப்பலதும் ஓட
சின்ன துரையுடனே **சிவிலாடர்** ஜலசந்தியும்
சிறந்தநகர் தன்னையவர் கண்டார்
கண்டவர்கள் காட்ட**சிவி லாடர்**நகர் தன்னைவிட்டு
கடுகவே மத்தியரேகைக் கடலில் வந்தாரே

வேறு

மத்தியரேகைக் கடலும்விட்டு வருதல்லோ பெரியகப்பல்
மன்னன் செங்கிடாக்காரன் மங்கை காவற்காரியுடன்
சின்னத்துரை யானவரும் சுக்கானைப் பார்த்திருக்க
சிங்கக்குடாய் யானதையும் சீக்கிரத்தில் வந்துகண்டார்
கண்டவர்கள் சந்தோசமாய் கப்பலது ஓடிவர

கணக்கன்செங் கிடாய்க்காரன் கண்போட்டு பார்த்திருக்க
தேடியந்தக் கப்பலது சிறந்த **தூஸ்னப்** பட்டணமும்
சொன்ன **யுவாக் கடலும்**விட்டு தீரன்கப்பல் வருகுதல்லோ
கார்ஸிகாத் தீவதையும் கண்டுகப்பல் தான்வரவே
காவலன் பரங்கித்துரை கண்டவரும் மனமகிழ

---

187. பாவினையாய்—சிறப்பாய் (வழக்கு)
பரனருள்—இறையருள்
188. சிவிலாடர்—ஜிப்ரால்டர் ஜலசந்தி (Gibralter)
189. மத்தியரேகைக்கடல்—மத்தியதரைக்கடல் (Mediteranian Sea)
184. சிங்கக்குடாய்—ஒரு வளைந்த சிறுகடல்
196. தூஸ்ன பட்டணம்—ஒரு நகரம்
197. யுவாக் கடல்—ஒரு சிறிய கடல்வளை
198. கார்ஸிகாதீவு—இத்தாலிக்கு மேற்கிலிருக்கும் தீவு (Carcica)

சர்டேனியத் தீவதுவும் தான்கடந்து சடிதியிலே
சதிவருவ தறியாமல் தானிருந்தார் பரங்கித்துரை
ரோமாபுரி நகரதனை நிமிஷத்திலே வந்துகண்டார்
நேர்மையுள்ள பரங்கித்துரை நேராகப் பார்த்திருக்க
கண்டு அந்த நகர்விட்டு கடலில் கப்பல் உருண்டோட

கவலக்காரி அம்மையுடன் கணக்கன் செங்கிடாய்க் காரனுமே
ஓடுதல்லோ கப்பலது உற்ற **நேப்பிள்ஸ்** நகர்நோக்கி
உல்லாசமாய் பரங்கித்துரை உகந்தவரும் பார்த்திருக்க
நகரம் நோக்கி வருகையிலே நகுலன் செங்கிடாய்க் காரன்
நரபெலிதான் உண்ணவென்று நாட்டமுடனே பார்த்திருக்க

சின்னத்துரையவரும் சிறந்த குசினிக் காரர்களும்
சிரித்து நன்றாய் மனம்மகிழச் சிறந்த **நேப்பிள்ஸ்** நகரம்விட்டார்
மேஜினா ஜலசந்தியும் விரைந்துகண்டார் பரங்கித்துரை
வேலைக்குள்ளே மலைகளையும் விரைந்துகண்டார் பரங்கிதுரை
சின்னதுரை கப்பலோட்ட ***சிசிலித்*** தீவு தான்கடந்து

சிவனருளால் ஓடுதல்லோ **டோரண்டோ** குடாவும் விட்டு
அட்ரியாடிக் கடலதிலே ஆணழகன் கப்பல்வர

---

200. சடிதி—துரிதம்
207. உல்லாசம்—ஆடம்பரம்
208. நகுலன்—விளக்கமுள்ளவன்
209. நரபலி—மனிதப்பலி
216. ஆணழகன்—அழகான வெள்ளைக்காரன்

அம்மை கவலக் காரியோடே அழகுகொடி மரத்திலிருந்
தாரன்றே

வேறு

கொடிமரம் தன்னிலே செங்கிடாய்க் கார சுவாமி
கூண்டாங் கிருக்கின்ற வேளைதன்னி லேதானும்

அட்ரியாடிக் கடலானது தன்னையும் விட்டு
ஆசையுடைய பரங்கித் துரையவர் கப்பல்
கிட்ட நெருங்கவே சந்தோச மாய்த்துரையும்
கீர்த்தியுடைய கிரீஸ் நகரானதும் விட்டார்
விட்டு பரங்கிதுரையவர் சந்தோஷமாக

ரெகுணன்செங் கிடாய்கார சுவாமி வரவே
மாட்டான முனையானது தன்னையும் விட்டு
வந்துகண்டாரே ராமக்கா முனையது தன்னை
கண்டு களிகூர்ந்து பரங்கித்துரை யவர்தானும்
கண்ணாடி வைத்தவர் பார்த்தாங் கிருந்தநேரம்

காண்டியா தீவுதானும் கடந்தந்தக் கப்பல்
கன்னிய குமரியைக் காணவேணும் எனவேதான்
சந்தோச மாகப் பரங்கித்துரை யவர்தானும்
சைப்பிரசைச் சடுதியிலே வந்து கண்டார்
பார்த்து மகிழ்ந்து பரங்கித் துரையவர் தானும்

பவிசை யுடையவர் பேரூட் மாநகர்விட்டார்
சூரத்தனமுள்ள பரங்கித்துரை யவர்கப்பல்
சூயஸ் நகரானது தன்னையும் நோக்கி
சிந்தை மகிழவே சூயஸ்நகர் தானதுவிட்டு
சிவனருளால் செங்கடல் தனில்வந்தாரே.

---

236. சூரத்தனம்—வீரம் (வழக்கு)

வேறு

செங்கடலைத் தான்கடந்து தீரன்கப்பல் வருகுதல்லோ
ஜூடா துறைமுகங்கடந்து சூச்சத்தினாற் பெருகுதல்லோ
கரியுரித்தோ னருளாலே கண்டாரே **சுமானரருள்** தீவு
சுமானரருள் தீவுதான்கடந்து கண்டாரே ஏடன்நகர்
ஏடன்பட் டணங்கடந்து ஏற்றகப்ப லோடிவர
எண்ணவொண்ணா பலதீவு இவர்களுமே தான்கடந்து
கப்பலின் மேல்தட்டத்திலே காவலனும் வீற்றிருக்க
கணக்கன்செங் கிடாய்க்காரன் கண்போட்டுப் பார்த்திருக்க
சின்னத்துரை யானவரும் சூச்சமதைப் பார்த்திருந்தார்
சிறந்தநல்ல குசினிக்காரர் சேர்ந்தவர்கள் தாங்கூடி
பசிவேளை வந்ததென்றால் பாவனையாய்ச் சாப்பிடுவார்
பரங்கித்துரை மனமகிழ பரபரென்ன ஓடுதல்லோ
ஏடன்குடா வதனைவிட்டு ஏற்றகப்பல் ஓடிவர
மாசிரா நகர்தோக்கி மாஆழியிலே கப்பல்வர
மளமௌன ஓடியந்த **மாற்படா** நகர்கடந்தார்
திமிங்கிலமும் பயந்தோட தீரன்கப்பல் ஓடுதல்லோ
செங்கிடாய்க் காரனோட சேயிழையாள் பார்த்திருக்க
மாஸ்கட்நக ரதுகடந்து வந்துகண்டார் **ஓமன்குடா**
மன்னன் அந்த பரங்கித்துரை மனமகிழ்ந்து சந்தோசமாய்

---

242. கரியுரித்தோன்—யானையின் தோலைஉரித்த சிவபெருமான்
254. மாஆழி—பெருங்கடல்
255. மாற்படாநகர்—ஓரிடம் (அரேபியாவில் உள்ளது)
258. மாஸ்கட் நகர், ஓமன்குடா } கப்பல் கடந்து வரும் இடங்கள் மத்திய ஆசியாவில் உள்ளது.

ஓமன்குடாய் கடந்தவர்கள் உல்லாச மாய்வரவே
உலகணிந்தோ னருளாலே ஓடுதல்லோ கப்பலது
செப்பமுள்ள அதிசூரன் செங்கிடாய்க் காரனவன்
திட்டமுட னிவர்களையும் சிறந்தகப்ப லானதையும்
எப்படியும் திரைதனிலே இவர்களையும் கொல்ல
வென்று

என்றுமனம் தன்னில்எண்ணி இருந்தார் கொடி
மரத்தில்
திக்குபுகழ் கொண்ட மன்னன் சிறந்த கப்பலுருவோடே
சின்னத்துரை கப்பலோட்ட சிறந்த அரபிக்கடலில்

வேறு

அரபிக்கடல் ஆனதிலே ஆணழகன் கப்பல்வர
அழகுடைய துரைமார்கள் சேர
சேர்ந்தவர்கள் அரபிக்கடல் சேர்ந்த கச்சி நகரம்விட்டு
திரைகடலிற் கப்பல்வரும் நேரம்

கட்சுக்குடாய் ஆனதையும் கண்டவர்கள் சந்தோசமாய்
காமனை எரித்தோனரு ளாலே
பலபல நகரங்களும் பாங்கான தீவுகளும்
பரங்கித்துரை யானவரும் விட்டு
சோமநாத நகரதுவும் சிறந்த காம்பே குடாயும்விட்டு
சூரத்நக ரானதிலே வந்தார்

---

269. கச்சி நகர் (கட்சு)
272. சோமநாத நகர்
காம்பேகுடா
சூரத் நகர்
} இந்திய நாட்டின் மேற்குக் கடற்கரை இடங்கள்

பார்த்தவர்கள் சந்தோஷமாய் பரங்கித்துரை சின்னத்
துரை
பாங்குடைய குசினிக்காரர் சேர
உஸ்கியோடு பிராந்தியையும் உள்குடித்துப் பரங்கித்
துரை
உல்லாச மாயிருக்கும் நேரம்

275. திடுதிடென் ஓடியந்த சிறந்த மாம்பேன் நகரம்விட்டு
தீரன் அந்தப் பரங்கித்துரை கப்பல்
கடலதிலே கப்பல்வரக் கண்டுசெங்கி டாய்க்காரன்
கண்போட்டுப் பார்த்தவ ரிருந்தார்
பார்த்தவரும் தானிருக்கப் பாஞ்சிமா நகர்நோக்கி
பரங்கித்துரை கப்பலது வரவே
படபடென ஓடியந்தப் பாஞ்சிமா நகரம்விட்டு
பரன் அருளால் கப்பலது வரவே
நாட்டமுடன் கப்பலது நல்ல ராமேஸ் முனைகடந்து
நாடியந்தக் கப்பல்வரும் வேளை.

280. கார்வார் நகரம்விட்டு காவலவன் பரங்கித்துரை
கண்ணாடி வைத்தவர் இருந்தார்
சுந்தரஞ்சேர் குசினிக்காரர் சூழ்ந்திருக்கப் பரங்கித்துரை
சொல்லுவாராம் சின்னத்துரையோடே
திட்டமுட னென்றனக்குச் சிறந்தகப்பல் செய்ததினால்
தீவுகளும் பலநகரும் கண்டோம்

---

274. உஸ்கி (Whisky)
பிராந்தி (Brandy)

275. மாம்பேன்—மும்பாயி என்பதன் மரூஉ (பம்பாய்)

277. பாஞ்சிமாநகர் – பஞ்சிம்—கோவாவிலுள்ளது.

279. ராமேஸ் முனை

280. கார்வார் நகர்

என்றுமன்னன் சந்தோசமாய் இருக்கின்ற வேளையிலே
ஏற்றநல்ல கப்பல் உருவோடே
ஓடியந்த மங்களுரும் உற்றமாகி நகரம்விட்டு
ஓடுதல்லோ கப்பலது தானும்

கேலிகட் பட்டணத்தை நேர்த்தியுடன் பரங்கித்துரை
கெம்பீரமாய் வந்தவரும் கண்டார்
கண்டு அந்த பரங்கித்துரை காவலவன்சந் தோசமாய்
காயங்குளம் தன்னை நோக்குவாராம்
நோக்கிஅந்த காயங்குளம் நிமிசத்திலே வந்துகண்டு
நேசமுள்ள பரங்கித்துரை சொல்வார்
நீரோட்டம் ஆனதையும் நிச்சயமாய் நாமள்கண்டோம்
நிமிசத்தில் சரக்கேற்ற வேணும்
வேணுமென்று பரங்கித்துரை விரைவாகச் சொன்ன போது
விரைந்து காயங்குளம் காயல்தன்னில் கப்பலை நிறுத்தினாரே

வேறு

ஏல, ஏல, ஏலஏல ஏலஏல ஏலலே
பாரமது ஏற்றவென்று பரங்கித்துரை உரைக்கவே
பரபரென்ன சரக்குவகைகள் பாரமது ஏற்றுவார்-ஏலஏல
மஞ்சளோடு சீரகமும் மலையிலுள்ள தேனுடன்
மன்னன் அந்தப் பரங்கித்துரை மனமகிழ ஏற்றுவார்
—ஏலஏல

---

284. மங்களுர்
மாகி நகரம்
285. காலிகட் (Calicut)
290. ஏல......ஏல : கடற் வழியாகக் கலம் செலுத்தி வாழ்வோரால் பாடப்படும் பாடல்
292. சரக்கு—பொருள்கள்

கங்கையணிந் தோனருளாலே நல்ல கடுக்காய் ஏலக்காய்-ஏற்றுவார்-ஏலஏல
கொத்தமல்லியும் கோழிபன்றியும் கூண்டகப்பலி லேற்றுவார்-ஏலஏல
துவரையோடு சிறுபயறு சீனிசர்க்கரை ஏற்றுவார் -ஏலஏல
சின்னதுரையும் கண்டுமகிழ சிறந்ததாழ்சபத்திரி-ஏலஏல
குங்குமமோடு செந்தூரமும் கோதுமையும் ஏற்றுவார் -ஏலஏல
கூண்ட கப்பல்ஆனதிலே கொலுவிருக்கப் பரங்கித்துரை -ஏலஏல
மல்லிகை சம்பாவோடு வால்நீண்டநெல் ஆனதும் -ஏலஏல
மணமுடைய சம்பாவும் மகிழ்ந்து கப்பலில் ஏற்றுவார் -ஏலஏல
புனுகுபன்னீர் கதம்பமோடு புரவிகரியு மேற்றுவார்-ஏல
புரத்தை எரித்தோ னருளாலே நல்ல பெருங்காயமும் ஏற்றுவார்-ஏலஏல
காப்பிக் கொட்டையும் தேயிலையும் கார்பேர்கத்தரியுடன் -ஏலஏல
கண்டந்தப் பரங்கித்துரை கண்ணாடிவைத் திருக்கவே -ஏலஏல
சின்னத்துரையும் கண்டுமகிழ சீனிகாரமும் ஏற்றவே -ஏலஏல
சிந்தை மகிழ்ந்து பரங்கித்துரையும் சிரித்துக்கொண் டிருக் கவே-ஏலஏல
உஸ்கி பிராந்தி சாராயக்குப்பி ஒழுங்கொழுங்காய் வைத்தனர்
உலகளித்தோனருளாற் கொஞ்சம் உஸ்கி பிராந்தி குடித்தனர்-ஏலஏல
மதுரமுடனே மல்லிகைசம்பா வாய்விளங்கம் ஏற்றுவார்

---

310. உலகளித்தோன்—இறைவன்
311. மதுரம்—இனிமை

மலையிலுள்ள மருந்துவகைகள் சிறப்பாய்க் கப்பலி லேற்றுவார்
கப்பல் தனிலே பரங்கித்துரையும் கண்ணாடி வைத்தவர் இருக்கவே
கவலக்காரி யம்மையுடனே கணக்கன் செங்கிடாய் காரனும்

திக்குபுகழ் கொடிமரந் தன்னிலே சிறந்தங்கிருக்கின்ற வேளையில்
சின்னத் துரையும் மனமகிழ்ந்து சொல்லுவாருள்ள சேதியை
அறைகள் பலவும் சரக்குவகைகள் அமைத்தோம் கப்பலில் ஒழுங்காக
ஆசையுடனே மனதுமகிழ்ந்து அருளுவீ ருள்ள செய்தியை
விமல னருளால் பரங்கித்துரையும் வினவினர் சின்ன துரையோடே

விரைவாய் நம்மொட கப்பலதனை விசையாய்த் திருப்பிடு என்றனர்
என்று பரங்கித்துரையும் சொல்லவே ஏற்ற சின்னத் துரையவர்
எங்கும் புகழும் சின்னத்துரையும் ஏற்றசுக்கானைத் திருப்பிடுவாராமே

வேறு

சிவனருளால் கப்பலதைச் சுக்கானைத் திருப்பிடவே
சின்னத்துரை கப்பல்ஓட்ட தீவுபல காணவென்று

---

319. விமலன்—தூயவனாகிய இறைவன்

காயம்குளம் காயல்விட்டு கடுகக் கப்பல் ஓடுதல்லோ —ஏலஏல
கணக்கன்செங் கிடாய்ரென் கண்டுமனம் சந்தோசமாய்
கொடிமரத்தி லவரிருக்க கூண்டகப்ப லோடுதல்லோ —ஏலஏல
கொன்றையணிந் தோனருளால் **கொச்சித்**துறை முகங்கண்டார்
கண்டுஅந்த பரங்கித்துரை கப்பலிலே தானிருக்க

கங்கையணிந் தோனருளால் கடந்தாரே கொச்சித்துறை
கருத்தாகப் பரங்கித்துரை கைவெடியை வெச்சிருக்க
கடந்துகப்பல் விரைவாகக் காயல்கள் பலகடந்து
உலகமளித் தோனருளால் ஓடுதல்லோ கப்பலது
உற்றகவலக் காரியுமே உற்சாகமாய்த் தானிருக்க

செங்கிடாய்க் காரனவன் சிறந்தகொடி மரமதிலே
சிறந்திருக்கக் கப்பலது திடுதிடென ஓடுதல்லோ
காக்கைஉரு தானெடுத்து கப்பலையும் அசைத்திடவே
கண்டுஅந்த பரங்கித்துரை கைவெடியால் நோக்குவாரம்
பார்த்துநின்று செங்கிடாய்க்காரன் பரனருளால் மறைந் திடவே

பரபரென்ன ஓடுதல்லோ பரங்கித்துரை கப்பலது
விரைந்து கப்பல்தானோடி **வேம்பநாட்டு காயல்**விட்டு
விமலனுட அருளாலே வீற்றிருந்தார் பரங்கித்துரை
காயலது தான்கடந்து கப்பலது தான்வரவே
கூடியபட்டண மானதையும் கருத்துடனே வந்து கண்டாரே

வேறு

சூச்சமதில் சின்னதுரை சுக்கானைப் பார்த்திருக்க
சிவனருளாற் கப்பலது திடுதிடென ஓடுதல்லோ
உஸ்கியோடு பிராந்தியையும் உல்லாசமாய்த் தான் குடித்து
உற்றநல்ல பரங்கித்துரை உகந்திருக்கும் வேளையிலே
கண்ணாடி வைத்தவரும் கரிசனையாப் பார்த்திருக்க

கடிய பட்டணம் கடந்து காவலன் கப்பலது
கப்பலது ஓடிவர கணக்கன்செங் கிடாய்காரன்
கவலக்காரி யம்மையுடன் கப்பலிலே தானிருக்க
ஆணழகன் பரங்கித்துரை அழகுடைய குசினிக்காரன்
ஆலப்புழைக் காயலதை அவர்களுமே தான்கடந்தார்

சின்னத்துரை யானவரும் சுக்கானைப் பார்த்திருந்தார்
திடுதிடென ஓடுதல்லோ தீரனுட கப்பலது
இதுசமயம் நன்றெனவே ஏற்றசெங்கி டாய்க்காரன்
ஏந்திழையாள் கவலக்காரி இருபேரும் மனம்மகிழ
ஆழியிலே குன்றுகுமடானதையும் இவர்கள் கண்டார்

ஆசையுடன் கப்பலது ஆலப்புழை கடந்ததல்லோ
சாராயம் உஸ்கியையும் தான்குடித்துப் பரங்கித்துரை
தானவரும் வீற்றிருக்க தாக்கன் செங்கிடாய்க்காரன்
வேளையிது நமக்கெனவே வீரனுமே பார்த்திருக்க
மெல்லி கவலக் காரியம்மை வீற்றிருக்கும் வேளையிலே

---

348. உகந்திருக்கும்—மகிழ்ந்திருக்கும்
349. கரிசனையாய்—மிகவும் கவனமாய்
359. ஆழி—கடல்
362. தாக்கன்—வலிமையுடையவன்

கடுக்க கப்பல் ஓடிவரக் கண்டு அந்த பரங்கித்துரை
கன்னியா குமரியையும் காணவென்று பாங்கித்துரை
கொயிலோன் துறைமுகமும்விட்டு கூண்டகப்பல் ஓடுதல்லோ
கொன்றையணிந்தோனருளால் கொலுவிருக்கப் பரங்கித் துரை
ஆணழகன் பரங்கித்துரை அகமகிழ்ந்து தானிருக்க

அழகன் சின்னத்துரையவரும் சுக்கானைப் பார்த்திருக்க
சின்னத்துரையவரும் சுக்கானைப் பார்த்திருக்க
சிவனருளாற் கப்பலதும் தீவிரமாய் ஓடுதல்லோ
செங்கிடாய்க் காரனவன் சேயிழையாள் கவலக்காரி
சிறந்தவர்கள் தானிருக்கத் திருவனந்தபுரத்தை நோக்கி ஓடினாரே

வேறு

திருவனந்த புரத்தைநோக்கி தீரன்கப்பல் வருகுதல்லோ
சின்னத்துரை யானவரும் சூச்சமதைப் பார்த்திருக்க
கப்பல்வரும் வேகம்கண்டு கணக்கன் செங்கிடாய்க் காரன்
கண்போட்டுப் பார்த்திருக்க கடலில் கப்பல் ஓடுதல்லோ
சிவனருளால் கப்பலது திடுதிடென ஓடிவர

சின்னத்துரை கப்பல் ஓட்டத் திருவனந்த புரத்தைக் கண்டார்
கண்டந்த பரங்கித்துரை கப்பல் தனிலே இருக்க
கண்டந்த குசினிக்காரன் களித்துமனம் சந்தோசமாய்
பிராந்தியோடு சாரயமும் புகழ்பெறவே தான்குடித்தார்
பெரியதுரை யும்மகிழ்ந்து பிராந்தியும் தான்குடித்தார்

---

337. கோயிலோன்—கொல்லம் துறைமுகம்

குடித்தந்த துரைமார்கள் சொலுவா யிருக்கையிலே
கூண்ட கப்பல் சூச்சமதைக் குறையறவே பார்த்திருக்க
சின்னத்துரை யானவரும் சூச்சமதைத்தானடத்த
திருவனந்த புரத்தைவிட்டுத் தீரன்கப்பல் வருகுதல்லோ
கண்ணாடி வைத்தவரும் கப்பலிலே பார்த்திருக்க

கறை கண்டனார் திருவருளால் கண்டாரே குளச்சல் நகர்
குளச்சல் துறைமுகம்விட்டுக் கூண்டகப்பல் ஓடுதல்லோ
கூத்தன்செங் கிடாய்க்காரன் கொடுவிழியும் பார்த்திருக்க
வேடிஎச்சி (வச்சியு)லுண்டதொரு விமலபரன் தண்ணருளால்
மாலயன் தேடிக்காணா மகாதேவன் தன்னருளால்

மடமடென்ன ஓடியந்த மண்டைக்காடு தன்னை விட்டார்
மன்னன் செங்கிடாய்க்காரன் வர்மமதாய் பார்த்திருக்க
மணவாளக் குறிச்சிவிட்டு வருகுதல்லோ கப்பலது
கண்போட்டுப் பார்த்திருக்க கடலில்கப்பல் ஓடுதல்லோ
கணக்கன் செங்கிடாய்க்காரன் காக்கைபோல வடிவெடுத்து

செங்கிடாய்க் காரனவன் சிறந்தகொடி மரமதையும்
சிவனருளால் கப்பலையும் திடுதிடென அசைத்து விட்டான்
ஆழியிலே கப்பலது அதிவிரைவா யோடிவர
அசைந்திடவே கொடிமரந்தான் ஆணழகன் பரங்கித் துரை
கண்ணாடி வைத்தவரும் கரிசனையாய்ப் பார்க்கும்போது

---

390. கறை கண்டனார்—சிவபெருமான்
396. வர்மமதாய்—கோபம் மிகுதியாய்க் கொண்டு; மனக் கொதிப்பு
404. கரிசனையாய்—கவனமாய்

காகமதைக் கண்டவரும் கைவெடியாற் சுட்டிடவே
சுட்டவரும் பார்க்கும்போது சூரன்செங்கிடாய்க்காரன்
சிவனருளால் கப்பலிலே சூச்சமதாய் மறைந்திடவே
மாயமதாய்க் காகமதும் மறைந்ததென்று மனதிலெண்ணி
மன்னவனும் இருக்கையிலே வருகுதல்லோ கப்பலது

பொழிற்கரையும் பிள்ளைதோப்பும் புகழ்பெறவே தானுங்கண்டார்
பேரழகன் பரங்கித்துரை பூராசமாய் இருக்கையிலே
நரியைப்பரி யாக்கினதோர் நாயகனார் தன்னருளால்
ராசாக்கா மங்கலமும்விட்டு நடுக்கடலில் உருவோட
பரங்கித்துரை கப்பலது பள்ளமென்ற துறையும்விட்டு

பார்த்தவர்கள் மனமகிழ பரபரென்ன ஓடுதல்லோ
நச்சுப்பொய்கை தன்னைவிட்டு நாயகனார் தன்னருளால்
நல்லகுமரன் தாழைவிட்டு நடுக்கடலில் உருவோட
மணக்குடியும் பொழிமுகமும் வந்துகண்டார் பரங்கித்துரை
வஞ்சிமன்னர் இட்டதொரு மண்கோட்டை தானும் கண்டார்

மண்கோட்டை தான்கடந்து வாய்த்த எல்கை வாரம்விட்டு
வம்பன்பொன் காத்தபெருமாள் வர்மமதாய்ப் பார்த்திருக்க
ஓடிவரக் கப்பலது உற்றகொடி மரத்திருந்தே
உல்லாசமாய்க் காக்கைபோல உதைத்தவனும் அசைத்திடவே

---

411. பூராசமாய்—இன்பமாக

ஆசையுடன் மனம்மகிழ்ந்து அவரும்வெடி எடுத்தனரே
சின்னத்துரை பார்க்திருக்க தீரன்அந்தத் துரையவனும்
சிந்தைதனில் யாகூலமாய்ச் சினந்தவரும் நோக்குவாராம்
அஞ்சுபனை மூடும்விட்டு அடுத்த தலைக்குளமும் விட்டு
ஆணழகன் அதிசூரன் அம்மைகவலக் காரியோடே
கோவைகுளம் தன்னைவிட்டு கூண்டகப்பல் ஓடிவர
கொடியன் செங்கிடாய்க்காரன் கோட்டிபல செய்திடவே
கல்லுமூலை குருசடியுங் கண்டு அந்த பரங்கித்துரை
கண்ணாடி வைத்தவரும் கரிசனையாய்ப் பார்த்திருக்க
தவிட்டுத்துறை யானதிலே தான்வரவே கப்பலது
தாக்கன்செங்கி டாய்க்காரன் சிறந்தகப்பல் ஆனதையும்
செறுத்தவனும் தாக்கவென்று செம்பருந்தாய் வடிவெடுத்தான்
வடிவெடுத்து கொடிமரத்தை வம்பனவ னசைத்திடவே
மடிந்து போவதறியாமல் மன்னனந்தப் பரங்கித்துரை
செம்பருந்து ஆனதையும் தீரனந்த பரங்கித்துரை
தீவிரமாய்ச் சுட்டிடவே செங்கிடாய்க் காரனவன்
வேளைஇது நமக்கெனவே வீரன்செங்கிடாய்க்காரன்
விரைவாக அசைத்துவிட்டான் வீரன் அந்தக்கொடி மரத்தை
கொடிமரத்தை அசைத்திடவே கோபங்கொண்ட பரங்கித்துரை
கோட்டிசெய்யும் பிராந்தனையும் கொன்றுவிட வேணுமென்று

---

427. ஆகூலம்—வருத்தம்
428 அஞ்சுபனை மூடு-அஞ்சுபனை மேடு என்பதன் திரிவு
431. கோட்டி—குழப்பச் செயல்
436. செறுத்தல்—தடுத்தல்

சின்னத்துரை பார்த்திருக்கத் தீரன்அந்தப் பரங்கித் துரை
திட்டமுட னவ்விடத்தில் தெரியாமல் மறைந்திடவே
மறைந்திருந்து செங்கிடாய்க்காரன் மரக்கலத்தைத் தாக்கவென்று
படபடென்னக் கப்பலதை வம்பனவ னசைத்துவிட்டான்
திடுதிடென அசைந்திடவே சின்னத்துரை யானவனும்

சூச்சமதை நடத்தாமல் திகைத்திருந்தார்; பரங்கித்துரை
பார்த்துமன்னன் சஞ்சலமாய் பரங்கித்துரை யானவரும்
பாரளந்தோ னருளாலே படப்போவ தறியாமல்
அறியாமல் அவரிருக்க ஆணழகன் அதிசூரன்
ஆழியிலே கப்பலையும் அவர்கொஞ்சம் தாழ்த்திடவே

தாழ்த்துசெங்கி டாய்காரன் தானவனும் பிராந்தாக [பருந்தாக]
தரணியளந் தானருளால் தானிருந்தார் கொடிமரத்தில்
கண்டந்தப் பரங்கித்துரை கண்ணாடி வைத்தவரும்
கைவெடியால் சுட்டிடவே காணாமல் மறைந்துவிட்டார்
மறைந்து அந்த மரக்கலத்தை மகாதேவர் திருவருளால்

மடமடென்னத் தாழ்த்திவிட்டான் மாண்டனரே துரைமார்கள்
வண்டன்பொன் காத்தபெருமாள் மங்கைகவலக் காரியம்மை
வன்குலையாய்த் துரைமாரை வழியிலே கொன்று விட்டார்

---

452. பாரளந்தோன்—திருமால்

462. வன்குலையாய்—கொடுமையான முறையில் கொலை செய்தல்

நரபலியாத் தானேற்று நகுலன் செங்கிடாய்க்காரன்
நாயகனார் திருவருளால் நங்கை கவலக் காரியோடே
இருக்கும் அந்த வேளையிலே ஏற்றநல்ல பரங்கித்துரை
ஈஸ்வரனா ரருளாலே ஈதுசெய்தாரந் நேரம்
மன்னன் தேவன்பறையிலே வலங்கையர்கள் தாங்கூடி
வாக்குடனே ஊட்டுணவு வைத்தார் செங்கிடாய்க் காரனுக்கே
கண்டந்த பரங்கித்துரை காவலவன் அப்போது
கல்லுமூலை தன்னைவிட்டு கனத்தரெத்த சேலையோடே
சின்னத்துரை தன்னோடே சிறந்த குசினிக்காரர்களும்
சிவனருளால் மாண்டவர்கள் ஒன்றாகத் தான்கூடி
வந்துமன்னர் பாறையிலே வாளரனார் தன்னருளால்
வர்மமதாய் வந்துநிற்க மன்னன்செங்கி டாய்க்காரன்
கண்டுசெங்கிடாய்க்காரன் காவலவ னீதுரைப்பான்
கபாலமது பளபளக்க கன்னி கவலக் காரியோடே
வன்குலையாய் மாண்டவர்க்கு வரங்கொடுக்க வேணுமென்று
மன்னதேவன் பாறையிலே வைத்தவர்க்குப் பூசைசெய்ய
கொடுக்கவென்று மனதிலெண்ணி கூண்டிருக்கும் வேளையிலே

---

463. நரபலி—மனிதப்பலி
468. ஊட்டுணவு—உண்ண உணவுவைத்தல்
470. ரெத்தசேலை—சிவந்த சேலை
473. வாளரனார்—சிவபெருமான்
476. கபாலம்—தீச் சட்டி

கோபாலன் தன்னருளால் கூறுவாராம் பரங்கித்துரை
கப்பலையும் உடைத்துவிட்டீர் கனமோசம் செய்து விட்டீர்
கறைகண்டனார் அருளால் கடையவரம் வேணுமென்றார்
வரங்கேட்க பரங்கித்துரை மன்னன் செங்கிடாய்க்காரன்
மங்கை கவலக் காரியம்மை வாளரனார் திருவருளால்

வன்குலையாய் மாண்டவொரு வடிவன் பரங்கித் துரையவர்க்கு
மன்னன்தேவன் பாறையிலும் மற்றும் பற்பல இடங்களிலும்
சின்னத்துரை தன்னோடே சிறந்த குசினிக்காரர்களும்
சேர ஒன்றாய்த்தாங்கூடி சிறந்தபூசை கொள்ளுவராம்
ஆழியிலே மாண்டவொரு ஆணழகன் துரையவர்க்கு

அரனருளால் வரமதுதான் அளித்தான் செங்கிடாய்க் காரன்
கொல்லவரம் வெல்லவரம் கூண்டபூசை கொள்ளவரம்
கொடுத்தான் செங்கிடாய்க்காரன் கோபாலன் தன்னருளால்
கோழியோடு சாராயம் கூண்ட நல்ல உஸ்கியொடு
குறையறவே தான்படைத்துக் கூட்டுப்பூசை கொள்ளவரம்
வள்ளுவனார் திருவருளால் வரம்கொடுத்தான் கிடாய்க்காரன்
மன்னன் தேவன்பாறையிலே மகிழ்ந்து பூசை கொண்டிருந்தாரே.

495, வள்ளுவனார்—இறைவன்

விளக்கவுரை

(எண்கள் பாடலடிகளைக் குறிக்கும்)

அச்சங்காவு (132)

அச்சங்காவு மேல்காத்துமலையிலுள்ள இரண்டாவரி மலையில் உள்ளது. செடி கொடிகளால் மண்டிக்கவிந்துள்ள இடத்தைக் 'காவு' என்று கூறுவார்கள். 'அச்சன்' தந்தை என்ற பெயரால் வழங்கப்படுகிறது. கப்பலுக்கு மரம் வெட்டுவதற்காக மக்கள் இந்தக் காவுக்கு வெள்ளைக்காரனுடன் வருகின்றனர்.

அஞ்சின் துறைமுகம் (370)

வெள்ளைக் காரனின் கப்பல் கன்னியாகுமரி நோக்கி வரும்போது அஞ்சின் துறைமுகம் வழியாக வருகிறது. இது கேரளத்தின் மேற்குக் கடற்கரையிலிருக்கும் ஒரு சிற்றூர். முன்பு சிறிய படகுகள் இங்கு வந்து செல்வதுண்டு. ஆகையினால் துறைமுகம் என்று கூறப்பட்டுள்ளது.

அஞ்சுபனை மூடு (428)

வெள்ளைக்காரனின் கப்பல் கன்னியாகுமரியினை நோக்கிவரும்போது அஞ்சுபனை மூடு என்ற இடத்தைக் கடந்துசெல்கிறது. இது குமரி மாவட்டத்தின் தெற்குக் கடற்கரைப் பகுதியைச் சேர்ந்த இடம் முன்பு ஐந்து பனைமரங்கள் ஒரு மேட்டில் இருந்திருக்க வேண்டும். அஞ்சு பனை மூடு என்பது அஞ்சுபனை மேட்டின் திரிபாக இருந்திருக்க வேண்டும். இவ்வாறு ஊர்ப் பெயர்கள் உள்ளன. இப்பொழுது அந்த ஊர் இல்லை, அழிந்துவிட்டதாகக் கருதலாம்.

அட்ரியாடிக் கடல் (216)

பரங்கித் துரையின் கப்பல் அட்ரியாடிக் கடல் வழியாக வருகிறது. இது மத்திய தரைக்கடலில் இத்தாலிக்கும் பால்கன் தீபகற்பத்துக்கும் இடையில் உள்ளது.

அரபிக்கடல் (267)

வெள்ளைக்காரனின் கப்பல் செங்கடலைக் கடந்து அரபிக்கடல் வழியாக இந்தியாவில் மேற்குக் கடல்கரையில் வந்து சேர்ந்ததாகக் கதைப்பாடல் கூறுகிறது. அரபிக்கடல் ஆப்பிரிக்காக் கண்டத்துக்கும் இந்தியாவுக்கும் இடையிலுள்ளது. முற்காலத்தில்கடல் வாணிபத்தில் சிறந்த அரேபியர்கள் அக்கடல் வழியாகத் தங்கள் வாணிபத்தைச் செய்துள்ளனர். அரேபியாவை ஒட்டி இக்கடல் உள்ளது. ஆகையினால் இந்தப் பெயரைப் பெற்றுள்ளது.

ஆட்டுக்கால் முனை (181)

பரங்கித் துரையின் கப்பல் ஆட்டுக்கால் (Cape of Ortegal) முனை வழியாக வருகிறது. இந்த முனை ஸ்பெயின் நாட்டின் மேற்குக் கரையின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ளது.

ஆரியங்காவு (132)

வெள்ளைக்காரன் கப்பலுக்கு உரிய மரங்களை வெட்டுவதற்கு மரங்கள் அடர்ந்த காட்டுக்கு வருகிறான். அவன் வந்த ஓர் இடத்துக்கு ஆரியங்காவு என்று பெயர். இது மேற்குத் தொடர்ச்சி மலையின் தென்பகுதியில் உள்ளது. (செங்கோட்டை கணவாயின் மேற்கே உள்ளது.)

ஆலப்புழைக்காயல் (354)

பரங்கித்துரையின் கப்பல் ஆலப்புழைக்காயல் வழியாக வருகிறது. இந்தக் காயலின் கரையில் ஆலப்புழை நகரம் இருக்கிறது. இது திருவிதாங்கூர் நாட்டின் மேற்குக் கரையில் உள்ளது. அகன்று விரிந்த நதி கடலில் கலப்பதால் அகலப் புழை என்பது திரிந்து ஆலப்புழை ஆகி இருக்க வேண்டும்.

இங்கிலீஷ் சானல் (178)

பரங்கித்துரையின் கப்பல்டோவர் துறைமுகத்திலிருந்து இங்கிலீஷ் சானல் வழியாக வருகிறது. இங்கிலீஷ் சானல் இங்கிலாந்துக்கும் பிரான்ஸ் நாட்டுக்கும் இடையிலுள்ள குறுகிய கடல் பரப்பாகும். இருபத்தொரு மைல் அகலமுடையது.

ஏடன்குடா (178)

பரங்கித்துரையின் கப்பல் ஏடன்குடா (Gulf of Aden) வழியாக வருகிறது. இது அரேபியாவின் கரையில் அரபிக் கடலுக்குள் உள்ளது.

ஏடன் நகர் (243)

பரங்கித் துரையின் கப்பல் ஏடன் நகர் (Aden) வழியாக வருகிறது. இது தெற்கு அரேபியாவில் உள்ளது. கப்பல் வந்து செல்வதற்கு ஏற்ற முக்கிய துறைமுகமாக விளங்குகிறது.

ஓமன் குடா (258)

பரங்கத்துரையின் கப்பல் ஓமன்குடா (Gulf of Omen) வழியாக வருகிறது. இது ஓமன் நாட்டின் தென்பகுதியில் உள்ளது.

கங்கையணிந்தோன் (295)

வெள்ளைக்காரன் கதைப் பாடலில் சிவனைப் பற்றிய குறிப்புகள் மிகுதியாக உள்ளன அவரை ஓரிடத்தில் கங்கையணிந்தோன் என்று கதைப் பாடல் ஆசிரியர் குறிப்பிடுகிறார். கங்கை ஒரு பெண் அவளைச் சடைமுடியில் சிவன் தாங்கியுள்ளார். பகீரதனின் தவத்தால் வானத்துக் கங்கை பூமிக்கு இறங்கி வருகிறது. அதன் வேகத்தைத் தடுக்கச் சிவன் அதனைத் தன் சடை முடியில் தாங்கிக் கொண்டு பின்னர் பூமியில் வழிய விடுவதாக ஒரு கதை கூறும். சிவனின் உரிமை மனைவி உமா தேவி என்றும், அவளுக்குத்தெரியாமல் கங்கை என்பாளைத் தனக்குத் துணைக்காகச்சடை முடிக்குள் வைத்துள்ளார் என்றும் ஒரு கதை கூறுவதுண்டு. கங்கையை அழகாகத் தலையில் தாங்கியுள்ள சிவனைக் கங்கையணிந்தான் என்று கதைப்பாடல் சிறப்பாகக் குறிப்பிடுகிறது.

கடியப்பட்டணம் (344)

வெள்ளைக்காரனின் கப்பல் கன்னியாகுமரி நோக்கி வரும் வழியில் கடியப்பட்டணத்தைக்கடந்து வருகிறது இது குமரிமாவட்டத்தின் மேற்குக் கடற்கரையிலிருக்கும் சிற்றூர் இங்கு மீனவர் அதிகம் வாழ்கிறார்கள்.

கட்சு நகர் (269)

பரங்கித்துறையின் கப்பல் கட்சு நகர் (Kutch) வழியாக வருகிறது இது இந்தியாவின் வடமேற்குக் கடற்கரையில் இருக்கிறது. இது ஒரு துறைமுகம். வெள்ளியாலான சரிகை வேலைப்பாடு களுக்குச் சிறந்த இடம்.

கட்சுக் குடா (270)

பரங்கித்துறையின் கப்பல் கட்சுக்குடா (Gulf of Kuuth) வழியாக வருகிறது. கட்சு நகருக்கு பக்கத்திலிருக்கும் சிறிய குடாக்கடலைக் கட்சுக் குடா என்று அழைக்கிறார்கள்.

கரியுரித்தோன் (242)

வெள்ளைக்காரன் கதைப்பாடல் பல இடங்களில் சிவபெரு மானைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசுகிறது. அவனைக் கரியுரித் தோன் என்று ஓரிடத்தில் கூறுகிறது. தாருகவனத்து முனிவர் கள் சிவனுக்கு எதிராக ஒரு யாகம் செய்து அதில் உருவான யானையை அனுப்புகிறார்கள். அது சிவனைக் கொல்ல வரும் போது அவன் அதனைக் கொன்று அதன் தோலை உரித்து ஆடையாக அணிந்து கொள்கிறான். இந்த கதையின் அடிப் படையில் சிவன் கரியுரித்தோன் ஆகிறான்.

கருவலம் காத்தபெருமாள் (158)

வெள்ளைக்காரன் கதைப்பாடல் செங்கிடாய்க் காரனைக் கருவலம் காத்த பெருமாள் என்று கூறுகிறது. செங்கிடாய்க் காரனை வணங்குவோருக்குக் கரு வாய்த்துப் பிள்ளைகள் பிறக்கும் என்பதுமக்களின் நம்பிக்கை ஆகையினால் அவனைக் கருவலங்காத்த பெருமாள் என்று குறிப்பிட்டுக் கூறுவர்.

கல்லுமூலை (432)

வெள்ளைக்காரனின் கப்பல் கன்னியாகுமரி நோக்கி வரும்போது கல்லு மூலையைத் தொட்டு வருகிறது. இது குமரி மாவட் டத்தின் தெற்குக்கடற்கரையின் ஒரு பகுதி. நிரம்பவும் பாறை களை உடையது. கன்னியாகுமரி முனையிலிருந்து சுமார்

இரண்டு கல் தொலைவுமேற்கில் உள்ளது. மிகவும் ஆபத்தான இடமாகக் கருதப்படுகிறது.

கவலக்காரி அம்மன் (205)

வெள்ளைக்காரனைக் குறி வைத்து செங்கிடாய்க்காரன் என்ற தெய்வம் கடலில் மூழ்கடித்துக் கொன்று விடுகிறது. அந்த தெய்வத்தின் சகோதரி கபாலக்காரி அம்மன். இவள் எரிகின்ற கபாலத்தை உடையவள் என்பதினால் கபாலக்காரி என்று அழைக்கப்படுகிறாள். 'கபாலக்காரி' என்ற சொல்லை நாட்டுப் புறக் கதைப் பாடல் ஆசிரியர் கவலக்காரி என்றும் காவற்காரி என்றும் பலவாறு திரிபுடன் பயன் படுத்தியுள்ளார்.

கழுகன் திட்டுப்பாறை (140)

வெள்ளைக்காரன் கப்பலுக்கு மரம் வெட்டுவதற்காகக் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மலைப் பகுதிக்கு வருகிறான். அங்கு கழுகன் திட்டுப் பாறை என்ற குன்று உள்ளது. கழுகு மூக்குப் போன்று அமைந்திருக்கும் திட்டுப் பகுதியான இடத்தை இந்தப் பெயரால் அழைத்துள்ளனர். இது மேல் காத்து மலைத் தொடரின் தென் பகுதியில் இருக்கும் ஒரு சிறிய குன்று.

கறை கண்டனார் (482)

வெள்ளைக்காரன் கதைப்பாடல் பல இடங்களில் சிவபெருமானைப் பற்றிக் கூறுகிறது. ஓரிடத்தில் கறை கண்டனார் என்ற குறிப்பு உள்ளது. தேவர்களும் அசுரர்களும் திருப்பால் கடலைக் கடையும் போது நாணாகப் பயன்பட்ட வாசுகி என்ற பாம்பு ஆலகால விஷத்தைக் கொட்டுகிறது. அதைக் கண்டு அஞ்சிய தேவர்கள் சிவனிடம் முறையிடுகிறார்கள். அவன் அந்தக் கொடிய நஞ்சை அள்ளி எடுத்து அருந்தி விடுகிறான். அதனைக் கண்ட பார்வதிதேவி நஞ்சு சிவனின் வயிற்றுக்குள் சென்று விடக்கூடாது என்ற எண்ணத்தில் அவருடைய கழுத்தை இறுக்கிப் பிடித்துக் கொள்கிறாள். நஞ்சு கீழிறங்காது கழுத்தில் நின்று அந்த இடத்தைக் கருப்பாக்கி விடுகிறது. ஆகையினால் அவர் கறை கண்டனார் ஆகிவிடு

கிறார். இதன் காரணமாக நீலகண்டன் என்ற பெயரையும் சிவன் பெறுகிறார்.

கன்னியாகுமரி (231)

பரங்கித் துரையின் கப்பல் டோவர் துறைமுகத்திலிருந்து கன்னியாகுமரி முனையை நோக்கி வருகிறது. கன்னியாகுமரி இந்தியாவின் தென் கோடியிலிருக்கும் முனையாகும். இங்கே அரபிக்கடல், இந்துப் பெருங்கடல், வங்கள விரிகுடா ஆகிய மூன்றும் இணைகின்றன. குமரிப் பகவதி அம்மன் கோயில் உலகப் புகழ் பெற்றது. இந்தியா முழுவதிலும் இருந்து மக்கள் இங்கு வருகிறார்கள். புனிதயாத்திரை இடமாக உள்ளது. காந்தி மண்டபம், விவேகானந்தர் மண்டபம் ஆகியவை காணத் தகுந்தன.

காக்காச்சி மலை (46)

வெள்ளைக்காரன் தன் கப்பலுக்கு மரம் வெட்டுவதற்காக மலைக்கு ஆட்களுடன் செல்கிறான். அவன் தேடிச் சென்ற மலைகளில் ஒன்று காக்காச்சி மலை. இது கருநிறப் பாறைகளை உடையது என்று கூறுவர். மேல்காத்து மலைத்தொடரின் தென் பகுதியில் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த இடத்தில் காக்காச்சி மலை உள்ளது.

காமனை எரித்தோன் [270]

வெள்ளைக்காரன் கதையில் சிவனைப் பற்றிய குறிப்புகள் பல இடங்களில் தரப் பெற்றுள்ளன. சிவன் காமனை எரித்த கடவுள். அவருக்குக் காமவுணர்வை ஊட்டக் கருதிய மன்மதன் (காமன்) மலர் அம்புகளை அவர் மேல் எய்கிறான். அப்பொழுது சிவன் தவநிலையில் கண்ணை மூடியவாறு இருக்கிறார். காமனின் கணை பட்டதும் தவம் கலைகிறது. பெருங்கோபம் கொள்கிறார். உடனே எதிரில் நின்ற காமனை கண்ணால் எரித்துச் சாம்பல் ஆக்கி விடுகிறார்,

காம்பே குடா (272)

பரங்கித் துரையின் கப்பல் காம்பே குடா (Camby) வழியாக வருகிறது. இது பாம்பேயைக் கத்திய வாரிலிருந்து பிரிக்கும் கடல் பகுதியாகும்.

காயங்குளம் (286)

வெள்ளைக்காரனின் கப்பல் காயங்குளம் வழியாகக் கன்னியா குமரி நோக்கி வருகிறது இது இன்றைய கேரள நாட்டின் மேற்குக் கடற்கரைப் பகுதியில் உள்ளது. கொல்லத்துக்கு வடக்கில் அமைந் திருக்கிறது.

காயங்குளம் காயல் (325)

வெள்ளைக் காரனின் கப்பல் காயங்குளம் காயலைக் கடந்து கன்னியாகுமரி நோக்கி வருகிறது. காயங்குளத்தின் பக்கத்தில் இருப்பதினால் இக்காயல் இவ்வாறு அழைக்கப்படுகிறது.

கார்வார் நகர் (280)

வெள்ளைக்காரனின் கப்பல் கன்னியாகுமரி நோக்கி வரும்போது இந்தியாவின் மேற்குக் கடற்கரையில் இருக்கும் கார்வார் நகரைக் கடந்து வருகிறது. இது கன்னட மாநிலத்தில் தென் கன்னட மாவட்டத்தில் மங்களூர் நகருக்கு வட பக்கத்தில் உள்ளது.

காவற்காரி (184)

வெள்ளைக்காரன் கதைப் பாடலில் செங்கிடாய்க் காரனுக்குத் துணையாக உள்ள அவன் சகோதரி காபலக்காரி அம்மனைச் சில இடங்களில் நாட்டுப்புறக் கதை ஆசிரியர் ‘காவற்காரி’ என்று அழைக்கிறார். கவலக்காரி என்றீ சொல் வழக்கும் காணப் படுகிறது. இவை சொற்சிதைவுகள் ஆகும். சரியான பெயர் கபாலக்காரி அம்மன். எரிகின்ற காபலத்தைக் கையில் தாங்கிய வள். இவளை ஒரு காவல் தெய்மாகவும் கருதியுள்ளனர்.

கார்ஸிகாத் தீவு (198)

பரங்கித் துரையின் கப்பல் கார்ஸிகாத் தீவின் வழியாக வருகிறது. இது இத்தாலிக்கு மேற்கே மத்தியதரைக் கடலுக்குள் இருக்கும்

இரண்டு பெரிய தீவுகளில் வடக்கே இருப்பதாகும். இது பிரான்ஸ் நாட்டுக்கு உரிமையாக இருந்தது இது நெப்போலியன் பிறந்த இடம்.

காண்டியா தீவு (230)

பரங்கித் துரையின் கப்பல் காண்டியா தீவு (Candia) வழியாக வருகிறது. இது கிரீஸுக்குத் தென்கிழக்குப் பகுதியில் இருக்கும் ஒரு இடமாகும். இது கிரீட் தீவின் தலைநகரமாக உள்ளது.

கிரீஸ் நகர் (223)

பரங்கித் துரையின் கப்பல் கிரீஸ் (Greece) வழியாக வருகிறது பால்கன் தீபகற்பத்தின் தென் பகுதி கிரீஸ் என்று அழைக்கப்படுகிறது. இதில் பண்டை நாகரீகம் மிகவும் சிறப்புற்று இருந்தது.

குமரன் தாழை (417)

வெள்ளைக்காரனின் கப்பல் கன்னியாகுமரி நோக்கிவரும்போது குமரன் தாழை வழியாக வருகிறது. இங்கு ஒரு குமரன் கோவில் உள்ளது. அப்பகுதியில் சுற்றிச் சூழ்த் தாழைப் புதர் நெருக்கமாகவும் அடர்த்தியாகவும் காணப்படும். இது உசரவிளையைச் சேர்ந்த கடற்கரைப் பகுதி. நச்சுப் பொய்கையிலிருந்து சிறிது தூரத்துக்குக் கிழக்கில் உள்ளது குமரி மாவட்டத்தின் தெற்குக் கடற்கரைப் பகுதியில் உள்ளது

குருசடி (432)

வெள்ளைக் காரனின் கப்பல் கன்னியாகுமரி நோக்கி வரும் போது குமரி முனையிலிருந்து சுமார் இரண்டு கல் தொலைவில் இருக்கும் கல்லு மூலையின் அருகே கடற்கரையிலுள்ள குருசடியைக் கடந்து செல்லுகிறது. இங்கு ஒரு குருசு அல்லது சிலுவை நிறுத்தப்பட்டுள்ளது. பொதுவாகச் சிலுவை நிறுத்தியுள்ள இடத்தைக் குருசடி எனறே கூறுவர். நாகர் கோவிலுக்குப் பக்கத்தில் ஓர் ஊருக்குக் குருசடி என்றே பெயர் உள்ளது.

குளச்சல் நகர் (390)

வெள்ளைக் காரனின் கப்பல் கன்னியாகுமரி நோக்கி வரும்போது குளச்சல் நகரைக் கடந்து வருகிறது. இது குமரி மாவட்டத்தின் மேற்குக் கடற்கரைப் பகுதியிலுள்ள துறைமுகப் பட்டினம் இங்கு முன்னர் வாணிபக் கப்பல்கள் வருவது உண்டு. டச்சுக்காரர்கள் முன்பு பெரும் போர் செய்த இடம்.

கேலிகட் பட்டணம் (285)

பரங்கித் துரையின் கப்பல் கேலிகட் (Calicut) துறைமுகம் வழியாக வருகிறது. அதை முன்னர் கோழிகோடு (Kozhikode) என்று அழைத்தனர். இது மலபார் கடற்கரையில் உள்ளது. வாஸ்கோட காமா முதன்முதலில் இங்கு வந்துதான் இறங்கினான் இதனைக் கள்ளிக் கோட்டை என்றும் கூறுவர். இங்கிருந்து காப்பி, வாசனைத் திரவியங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. காலிக்கோ துணி அங்கிருந்து போர்த்துக் கீசியரால் வாணிபம் செய்யப்பட்டதால் கேலிகட் என்ற பெயர் வந்ததாகக் கூறுவர். முன்பு இதனை அரசாண்ட சாமோதிரி என்பவனுக்குக் கோழி எல்லைக் கோடிட்டு காட்டியதனால் இதற்குக் கோழிக்கோடு என்ற பெயர் வந்ததாக ஒரு கதை சொல்லப்படுகிறது.

கொச்சித் துறைமுகம் (328)

பரங்கித் துரையின் கப்பல் கொச்சித் துறைமுகம் (Cochin) வழியாக வருகிறது இது முன்பு கொச்சி நாட்டின் தலைநகரமாக விளங்கியது. கப்பல் கட்டும் இடம். தேயிலை, தேங்காய், தேங்காய் எண்ணெய் முதலியவை இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது.

கொயிலோன் துறைமுகம் (367)

பரங்கித் துரையின் கப்பல் கொயிலோன் துறைமுகம் (Quilon) வழியாக வருகிறது. இதனைக் கொல்லம் என்று கூறுவர். இது திருவிதாங்கூர் நாட்டின் இடைப் பகுதியில் மேற்குக் கடற்கரையில் உள்ளது. இங்கிருந்து தேங்காய், முந்திரி (அண்டிப் பருப்பு) மிளகு, மரம் முதலியவை ஏற்றுமதி செய்யப்படுகிறது.

கொன்றையணிந்தோன் (368)

வெள்ளைக் காரன் கதைப் பாடல் பல இடங்களில் சிவபெருமானைக் குறிப்பிடுகிறது. சிவன் கொன்றை மலரைத் தன் சடை முடியில் அணிந்தவன். ஆகையினால் அவனைக் கொன்றையணிந்தோன் என்று கூறுகிறது

கோயின் பாருநகர் (181)

பரங்கித் துரையின் கப்பல் கோயின் பாருநகர் (Coimbra) வழியாக வருகிறது. இது போர்த்துக்கீசிய நாட்டிலுள்ள பெய்ரா லித்தோரல் (Beira Litroal) மாகாணத்தின் தலைநகரம். இது அட்லாண்டிக் கடற்கரையில் போர்த்துக்கீசிய நாட்டின் வட பகுதியில் உள்ளது.

கோவைகுளம் (430)

கன்னியாகுமரியை நோக்கி வரும் வெள்ளைக்காரனின் கப்பல் கோவைக் குளம் வழியாக வருகிறது. இது குமரி மாவட்டத்தின் தெற்குக் கடற்கரைப் பகுதியில் உள்ளது. இதனை இப்பொழுது கோவளம் என்று கூறுகிறார்கள். இது மீனவர் குடியிருப்பு. இதன் வடபகுதியில் உப்பளம் உள்ளது. முன்பு இந்த உப்பளப் பகுதி தலைக் குளமாக இருந்தது என்று முதியோர் கூறுவர்.

சார்டேனியத் தீவு (200)

பரங்கித் துரையின் கப்பல் சார்டேனியாத் தீவின் வழியாக வருகிறது. இது இத்தாலிக்கு மேற்கே மத்தியதரைக் கடலில் இருக்கும் இரண்டு தீவுகளில் தெற்கே இருப்பது. இது இத்தாலிக்கு உரிமையானது.

சிங்கக் குடா (193)

பரங்கித் துரையின் கப்பல் மத்தியதரைக் கடலில் புகுந்து சிங்கக் குடா (Gulf of Lion) வழியாக வருகிறது. இது பிரான்ஸ் நாட்டின் தென் கிழக்குப் பகுதியில் மத்தியதரைக் கடலுக்குள் இருக்கிறது.

சிசிலித் தீவு (214)

பரங்கித் துரையின் கப்பல் சிசிலித் தீவைத் (Sicily) தொட்டு வருகிறது. இது இத்தாலி நாட்டைத் தொட்டு தென் பக்கத்திருக்கும் தீவு. மத்தியதரைக் கடலுக்குள் இது மிகவும் பெரிய தீவு. இதில் எட்னு எரிமலை இருக்கிறது.

சிவனணைஞ்ச பெருமாள் நாடார் (6)

வெள்ளைக் காரன் கதைப் பாடலின் ஆசிரியர் முத்தையா வாத்தியாரின் தந்தை சிவனணைஞ்ச பெருமாள் நாடாராவர். இதனை ஆசிரியரே நன்றாகத் தெளிவு படுத்திக் கூறியுள்ளார்,

சிவிலாடர் நகர் (189)

பரங்கித் துரையின் கப்பல் சிவிலாடர் நகரின் (Giberalter) வழியாக வருகிறது இது சிவிலாடர் நீரிணைப்பு (ஜலசந்தி) பகுதியில் உள்ளது. அப்பொழுது இந் நகரம் ஆங்கிலேயரின் கடற்படைத் தளமாகச் சிறந்து விளங்கியது. மத்தியதரைக் கடலின் மேற்கு ஓரப்பக்கதில் உள்ளது. ஸ்பெயின் நாட்டின் தென் எல்லைப் பகுதியைத் தொட்டு அமைந்துள்ளது. இந்த ஊரின் பெயரே இங்குள்ள ஜல சந்திக்கும் அமைந்துள்ளது.

சிவிலாடர் (188)

பரங்கித் துரையின் கப்பல் சிவிலாடர் நீரிணைப்பைக் (Strait of Gibralter) கடந்து வருகிறது. இது ஸ்பெயின் நாட்டுக்கும் ஆப்ரிக்காவுக்கும் இடையில் அட்லாண்டிக் பெருங்கடலையும் மத்தியதரைக் கடலையும் இணைக்கும் நீரிணைப்பு (ஜலசந்தி) ஆகும்.

சுமான்ரருள் தீவு (242)

வெள்ளைக்காரனின் கப்பல் இங்கிலாந்து நாட்டிலிருந்து கன்னியாகுமரிக்கு வரும் வழியில் செங்கடலின் தென்கிழக்குப் பகுதியில் இருக்கும் சுமானரருள் தீவைக் கடந்து வருகிறது.

சூயஸ் நகர் (237)

பரங்கித் துரையின் கப்பல் சூயஸ் (Suez) நகர் வழியாக வருகிறது இது செங்கடலின் வடமேற்குப் பகுதியில் உள்ளது. இது அரேபியப் பாலை வனத்துக்கும் செனாய் (Sinai) தீபகற்பத்துக்கும் இடையில் உள்ளது. செங்கடலையும் மத்தியதரைக் கடலையும் இணைக்கும் சூயஸ் கால்வாய் இங்கு உள்ளது. இந்தக் கால்வாய் 25—4—1959 இல் வெட்டத் தொடங்கி 9—11—1868 ஆம் நாள் கப்பல் போக்கு வரத்துக்குத் தகுதியாக முடிக்கப்பட்டது. கால்வாயின் ஒரு புறம் சூயஸ் நகரமும் மறுபுறம் போர்ட் செட் நகரமும் உள்ளன.

சூரத் நகர் (272)

பரங்கித் துரையின் கப்பல் சூரத் நகர் (Surat) வழியாக வருகிறது. இது தப்தி நதியின் முகத்துவாரத்தில் இருக்கும் துறைமுகப் பட்டினம் ஆகும் பருத்தி, பட்டு, பூ வேலைப் பாடுகளுக்குச் சிறந்த இடம்

செங்கடல் (240)

பரங்கித் துரையின் கப்பல் செங்கடல் (Red sea) வழியாக வருகிறது. இது அ[illegible]பிய நாட்டை ஆப்பிரிக்காக் கண்டத்திலிருந்து பிரிப்பதாகும்.

செங்கிடாய்க்காரன் (காப்பு)

நாட்டுப்புறத் தெய்வமாகச் செங்கிடாய்க் காரன் வணங்கப்படுகிறான். இவன் ஒரு பூதம். கைலாய மலையைக் காவல் செய்ய சிவபெருமானால் படைக்கப் பட்டவன். கைலாயக் காவல் வேலை தீர்ந்ததும் சிவபெருமானால் பூவுலகத்துக்கு அனுப்பப் படுகிறான். அங்கு மக்கள் அவனை வணங்கி வருகிறார்கள். அவனுக்குச் செங்கிடாய் பலி கொடுத்துப் படையல் நடத்துவது வழக்கம். வெள்ளைக்காரன் கப்பலில் வரும்போது அவனுடைய கப்பலைக் கடலில் மூழ்கச் செய்து அவனைச் செங்கிடாய்க் காரன் கொன்று விட்டதாகக் கதைப் பாடல் கூறும். செங்கிடாய்க்

காரனுடைய கதைப்பாடலும் வில்லுப் பாட்டாக எழுதப் பட்டுள்ளது. அது சுவடியாகக் கிடைக்கிறது. அவனுக்குத் துணையாகக் கபாலக்காரி அம்மன் என்ற பெண் தெய்வம் உண்டு. அவள் செங்கிடாய்க் காரனின் சகோதரி என்று கூறப் பட்டுள்ளது. தென் மாவட்டங்களில் பலஊர்களில் செங்கிடாய்க் காரன் வணக்கம் உள்ளது. வெள்ளைக்காரனை வணங்கும் போது இவனுக்கு முதல் பூசை நடைபெறும். இவனை ஓர் ஆற்றல் மிக்க நாட்டுப்புறத் தெய்வமாக மக்கள் கருதுகின்றனர் தமிழ் நாட்டின் தென் மாவட்டங்களில் செங்கிடாய்க்காரன் வணக்கம் மிகுதியாக நடைபெறுகிறது.

செண்ட் வின்செண்ட் முனை (185)

பரங்கித் துரையின் கப்பல் செண்ட் வின்செண்ட் முனை (Cape St Vincent) வழியாக வருகிறது. இது போர்த்துகல் நாட்டிலுள்ள தென்மேற்கு மாகாணத்தின் தலைநகராக உள்ளது. இதில் ஸ்பெயின் நாட்டுக்கப்பல்படையை 1797 ஆம் ஆண்டில் இங்கிலாந்தின் கப்பல் படை தோற்கடித்தது.

சைப்பிரஸ் 233

பரங்கித் துரையின் கப்பல் சைப்பிரஸ் தீவு (Cyprus) வழியாக வருகிறது. இது மத்தியதரைக் கடலின் கிழக்குப் பகுதியில் ஆங்கிலேயருக்கு உரிமை உடையதாக இருந்தது.

சோமநாத நகர் (272)

பரங்கித் துரையின் கப்பல் சோமநாத நகர் (Somanath) வழியாக வருகிறது. இது சௌராஷ்டிராவில் உள்ளது. இங்கு ஒரு சைவக் கோயில் வரலாற்றுச் சிறப்புடன் விளங்குகிறது. இதை கஜினி முகமது 17 முறை கொள்ளை அடித்தது வரலாற்று நிகழ்ச்சியாகும். கட்சு வளைகுடாவின் பக்கத்தில் மிகவும் சிறப்புடன் விளங்குகிறது.

டோவர் ஜலசந்தி (174)

பரங்கித் துரையின் கப்பல் டோவர் நீரிணைப்பின் (Strait of Dover) வழியாகக் கன்னியாகுமரிக்கு வருகிறது. டோவர்

துறைமுகத்திலிருந்து முதன் முதலில் புறப்படுகிறது. இது கென்ட் (Kent) மாகாணத்தைச் சேர்ந்தது. இங்கிலாந்தின் தென் கிழக்குப் பகுதியில் உள்ளது. இது ஒரு கப்பல் தளமாகும். ஐரோப்பாவுக்கும் கிழக்கு நாடுகளுக்கும் செல்பவர்களுக்கு முக்கிய துறைமுகம். இங்கிலாந்தில் உள்ள தேம்ஸ் நதி கடலில் கலக்குமிடத்து உள்ளது.

டோராண்டோ (235)

பரங்கித் துரையின் கப்பல் டோராண்டோ குடா (Gulf of Taranto) வழியாக வருகிறது. இது இத்தாலி நாட்டில் தென் கிழக்குப் பகுதியிலிருக்கும் குடாக் கடலாகும்.

தலைக்குளம் (428)

வெள்ளைக்காரனின் கப்பல் கன்னியாகுமரியை நோக்கி வரும் போது கடற்கரையில் இருக்கும் தலைக் குளத்தை கடந்து செல்கிறது. இது குமரி மாவட்டத்தின் தெற்குக் கடற்கரையில் உள்ள குளம். இப்பொழுது தலைக்குளம் உப்பு அளமாக மாற்றப்பட்டுள்ளதாகக் கூறுவர். கடற்கரை வரையிலும் இதன் தண்ணீர் பாய்ந்து நெல் பயிரிடப்பட்டுள்ளது. இப்பொழுதும் அப்பகுதியில் ஒரு குளம் தலைக்குளம் என்ற பெயரால் வழங்கப் படுகிறது. ஆனால் அது வால்குளம் என்பதின் முனைப் பகுதியே என்று முதியவர்கள் கூறுகின்றனர். இது பூசைப்புரைத் தட்டு, இலந்தையடி விளை ஆகிய ஊர்களுக்கு இடையில் கடற் கரையை அடுத்து உள்ளது. இதன் மூலம் கடற்கரை வரையில் நெல் பயிரிடப்பட்டுள்ளது.

தவிட்டுத் துறை (434)

வெள்ளைக் காரனின் கப்பல் கன்னியாகுமரி வரும் வழியில் தவிட்டுத் துறை என்ற இடத்துக்கு வந்ததும் கடலில் மூழ்கி விடுகிறது. இது குமரி மாவட்டத்தின் தெற்குக் கடற்கரை யிலிருக்கும் கற்பாறைகள் மிகுந்த இடம். குமரி முனையிலிருந்து சுமார் ஒன்றரை கல் தொலைவில் மேற்கே உள்ளது.

திருவனந்தபுரம் (374)

பரங்கித் துரையின் கப்பல் திருவனந்தபுரம் (Trivandrum) வழியாக வருகிறது. இது திருவிதாங்கூர் நாட்டின் தலைநகரம். மேற்குக் கடற்கரையில் உள்ள பெரிய நகரம். மரங்களில் கொத்து வேலைப் பாடுகளுக்குப் புகழ் பெற்ற இடம். இன்று கேரள நாட்டுக்குத் தலைநகரமாக உள்ளது. திருமால் அனந்த சயனமாக வீற்றிருக்கும் பத்மநாப சுவாமி கோயில் இருப்பதினால் திருவனந்தபுரம் என்று பெயர் பெற்றது. முன்பு இதனை அனந்தன்காடு என்றே அழைத்துள்ளனர்.

தூஸ்னப் பட்டணம் (196)

பரங்கித்துரையின் கப்பல் தூஸ்னப் பட்டனம் (Toulouse) வழியாக வருகியது. இது பிரான்ஸ் நாட்டின் தென்கிழக்குப் பகுதியில் இருக்கும் நகரமாகும். இது காரணி (Garonne) நதியின் முகத்துவ ரத்தில் உள்ளது.

நச்சுப்பொய்கை (416)

வெள்ளைக்காரனின் கப்பல் கன்னியா குமரி நோக்கி வரும் போது நச்சுப் பொய்கைப் பகுதியைக் கடந்து வருகிறது. இது குமரி மாவட்டத்தின் தெற்குக் கடற்கரையை ஒட்டியுள்ள உசரவிளை ஊரில் உள்ளது. இங்கு ஒரு கோவிலும் சிறு ஊற்றும் இருக்கின்றன. ஊற்று முற்காலத்தில் நஞ்சுத் தண்ணீர் உடையதாக இருந்தது என்று மக்கள் நம்புவர். இந்தப் பொய்கையில் பஞ்ச பாண்டவர் நஞ்சுத் தண்ணீர் குடித்து மாண்டதாக கூறுவர்.

நரியைப் பரியாக்கினதோர் நாயகன் (412)

வெள்ளைக்காரன் கதைப் பாடல் பல இடங்களில் சிவபெருமானைப் பற்றிக் குறிப்பிடுகிறது. அவ்வாறு வந்த குறிப்புகளில் ஒன்று நரியைப் பரியாக்கியதோர் நாயகன் என்பதாகும். மாணிக்க வாசகர் பாண்டியனிடம் குதிரை வாங்குவதற்காகப் பெற்ற பணத்தை இறைவனின் திருப்பணிக்காகச் செலவு செய்து விடுகிறார். பாண்டியன் வெகுண்டு மாணிக்கவாசகரைச்

சிறையில் அடைத்து விடுகிறார். ஆவணி மூல நன்னாளில் சிவன் காட்டிலுள்ள நரிகளைப் பரிகளாக்கி மதுரைக்கு அழைத்து வருகிறார். இவ்வாறு நரிகளைக் குதிரைகளாக மாற்றியதினால் சிவனை நரியைப் பரியாக்கிய நாயகன் என்று கதைப் பாடல் கூறுகிறது. குதிரைகள் மீண்டும் நரியாவதில் கதை இன்னும் நீண்டு செல்கிறது.

நீரோட்டம் (175)

வெள்ளைக்காரன் இங்கிலாந்திலுள்ள டோவர் துறைமுகத்தில் கப்பல் கட்டி முடிகிடிறான். அதனை முதன் முறை கடலில் இறக்கி அதன் ஓட்டகத்தைத் பார்க்கிறார்கள். அவ்வாறு முதன் முதலில் கப்பலை நீரில் இறக்குவதைப் 'நீரேட்டம் பார்த்தல்' என்று கதைப் பாடல் கூறுகிறது இதனைச் சில இடங்களில் 'வெள்ளோட்டம் பார்த்தல்' என்று கூறுவதைக் காணலாம். புதிய வண்டி ஒன்றைத் தரையில் முதல் முறை ஓட்டுவதையும் 'வெள்ளோட்டம் பார்த்தல்' என்று கூறும் வழக்கம் இன்றும் நாட்டுப் புறத்தில் உண்டு.

நேப்பிள்ஸ் நகர் (206)

பரங்கித்துறையின் கப்பல் நேப்பிள்ஸ் நகரின் (Naples) வழியாக வருகிறது, இது தென் இத்தாலியில் மேற்குக் கடற்கரையில் இருக்கிறது. விசுவியஸ் எரிமலை இதன் பக்கத்தில் உள்ளது.

பஞ்சிம் நகர் (207)

வெள்ளைக்காரனின் கப்பல் பஞ்சிம் நகர் (Panjim) வழியாக வருகிறது. இது போர்த்துக்கீசியருக்குச் சொந்தமான கோவாவின் தலைநகரம்.

பரங்கித்துறை (காப்பு 1)

மேல் நாட்டிலிருந்து இந்தியாவுக்கு வந்தவர்களைப் பரங்கிகள் என்று மக்கள் அழைப்பது வழக்கம். முதன் முதலில் போர்த்துக்கீசியர்களையே பரங்கியர் என்று குறிப்பிட்டுள்ளனர். பின்னர் அனைவரையும் அவ்வாறே அழைத்துள்ளனர். வெள்ளைக்காரன் ஆங்கில நாட்டைச் சேர்ந்தவன். அவனைக் கதைப்

பாடல் பரங்கித் துரை என்று குறிப்பிடுகிறது. பொதுவாக ஆங்கிலத்தில் 'Lord' என்று கூறுவதைத் தமிழில் 'துரை' என்ற சொல்லால் குறிப்பிட்டுள்ளனர்.

பள்ளம் (414)

வெள்ளைக்காரனின் கப்பல் கன்னியாகுமரி முனை நோக்கி வரும்போது பள்ளம் வழியாக வருகிறது. இது குமரி மாவட்டத்தின் தெற்கு கடற்கரையிலுள்ள ஒரு சிற்றூர். மீனவர் குடியிருப்பு.

பாரளந்தோன் (452)

வெள்ளைக்காரன் கதைப்பாடல் சில இடங்களில் திருமாலைப் பற்றிக் குறிப்பிடுகிறது. திருமால் மகாபலி மன்னரிடம் மூன்றடி நிலத்தை வேண்டுகிறார். அவர் தர ஒப்புக் கொண்டதும் வானத்தை ஓரடியாகவும் நிலவுலகை ஓரடியாகவும் அளந்து மூன்றாவது அடிக்காக அவன் தலையில் கால் வைத்து நிலத்துக்குள் அழுத்தி விட்டதாகக் கதை கூறுகிறது. நிலத்தை ஓரடியாக அளந்ததனால் திருமாலைப் பாரளந்தோன் என்று கூறுவர்.

பிரஸ்ற்று நகர் (178)

பிரஸ்ற்று நகர் (Brest) வழியாகப் பரங்கித் துரையின் கப்பல் கன்னியாகுமரியை நோக்கி வருகிறது. இது பிரஞ்சு நாட்டில் வடமேற்குக் கடற்கரையில் உள்ளது. இது ஒரு கப்பல் தளமாக விளங்குகிறது.

பிள்ளைத்தோப்பு (410)

வெள்ளைக்காரனின் கப்பல் கன்னியாகுமரி நோக்கி வரும் போது பிள்ளை தோப்பு வழியாக வருகிறது. இது குமரி மாவட்டத்தின் மேற்குக் கடற்கரையிலுள்ள ஒரு சிற்றூர். மீனவர் குடியிருப்பு.

பிஸ்கே குடா (180)

பரங்கித்துரையின் கப்பல் பிஸ்கே குடா (Bay of Bisca)வழியாக வருகிறது. இது பிரான்ஸ் நாட்டின் மேற்குக் கரையின் தெற்குப் பகுதியில் ஸ்பெயின் நாட்டைத் தொட்டு அமைந்துள்ளது. இது புயல் காற்று வீசும் பகுதி. அட்லாண்டிக் பெருங்கடலின் பாகமாக உள்ளது.

புரத்தை எரித்தோன் (304)

சிவனைப் பல இடங்களில் வெள்ளைக்காரன் கதைப்பாடல் குறிப்பிடுகிறது. சிவன் முப்புரத்தைத் தன் சிரிப்பால் எரித்தவன் என்ற கதைக் குறிப்பு இந்தத் தொடருக்குள் அடங்கி உள்ளது. உலகுக்குக் கொடுமை செய்யும் தாராக்சன், கமலாக்சன், பிருதியுன்மாலி ஆகிய மூன்று அசுரர்கள் முறையே பொன், வெள்ளி, இரும்பு ஆகியவற்றால் கோட்டை கட்டி அரசாள்கிறார்கள். அவற்றை முப்புரம் என்று கூறுவர். அவர்களுடைய கொடுமை தாங்காத தேவர் சிவனிடம் முறையிட அவர் முப்புரத்தின் மேல் படையெடுத்துச் செல்கிறார். பூமியாகிய தேரிலிருந்து சிவன் முப்புரத்தைப் பார்த்துக் கோபத்தால் சிரித்ததும் மூன்று கோட்டைகளும் எரிந்து சாம்பலாயின.

பூவியூர் (5)

வெள்ளைக்காரன் வணக்கம் நடக்கும் இரண்டு ஊர்களில் ஒன்று பூவியூர். இத்தகக் கதைப் பாடல் ஆசிரியரான முத்தையா வாத்தியார் பூவியூரைச் சேர்ந்தவர். இவ்வூர் கன்னியாகுமரி மாவட்டத்தில் அகத்தீசுவரம் தாலுகா தாமரைக் குளம் பகுதியில் உள்ளது. கன்னியாகுமரி முனையிலிருந்து சுமார் மூன்று கல் தொலைவில் மேற்கே உள்ளது. 'பூவி' என்ற பெண்ணின் பெயரால் இந்த ஊருக்கு இந்தப் பெயர் வந்துள்ளது. இங்கு முத்தாரம்மன் கோயில், செங்கிடாய்க் காரன் கோயில், வெள்ளைக்காரன் கோயில் ஆகியவை ஊருக்குப் பொதுவானவை. சிறப்பாக இங்கு வில்லுப்பாட்டுடன் கொடைகள் நடைபெறும்.

பெல்லித்தீவு (180)

பரங்கித்துறையின் கப்பல் பெல்லித் தீவின் (Belley) வழியாக வருகிறது. இது பிரான்ஸ் நாட்டுக்குச் சொந்தமான தீவு.

பேருட் மாநகர் (235)

பரங்கித் துறையின் கப்பல் பேருட் நகர் (Beirut) வழியாக வருகிறது. இது மத்திய ஆசியாவிலுள்ள லெபனன் (Lebnon) நாட்டின் தலைநகரம்.

பொழிமுகம் (418)

